இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 219 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 07 – புதன்கிழமை 20 மார்ச் 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 219 : Thiruvalluvar Year - 2055 - Panguni 07 - Wednesday 20 March 2024 - Chennai 12 Pages ₹ 5.00



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. கூட்டணியில் மக்களவை தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திருப்பூரில் போட்டியிடும் சுப்பராயன், நாகப்பட்டினத்தில் போட்டியிடும் வை. செல்வராஜ் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. கூட்டணியில் மக்களவை தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சிதம்பரம் தொகுதியில் போட்டியிடும் அக்கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் மற்றும் விழுப்புரம் தொகுதியில் போட்டியிடும் ரவிக்குமார் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, துணை பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## ‘இந்தியா’ கூட்டணி மகத்தான வெற்றி அடைந்திட

# “ஒன்றுபட்டு நிற்போம்! வென்றுகாட்டியே தீருவோம்!”

## கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, மார்ச் 20 -**

**நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி மகத்தான வெற்றி அடைந்திடவும், இந்திய ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்திக் காட்டிடவும், ஒன்றுபட்டு நிற்போம்! வென்றுகாட்டியே தீருவோம்! என்று கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

இந்திய ஒன்றியத்தின் பன்முகத்தன்மையைக் காக்கவும், மதவெறி சக்திகளை வீழ்த்தி மதநல்லிணக்கம் தழைக்கவும், அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள ஜனநாயகத்தை மீட்கவும் ‘இந்தியா’ கூட்டணியை 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்கிற ஒரே இலக்குடன் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து நிற்கும் தோழமைக் கட்சியினர் அனைவரையும் வரவேற்கிறேன்.

கடந்த 10 ஆண்டுகாலமாக இந்திய ஒன்றியத்தை ஆட்சி செய்த பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத - மாநில உரிமைகளைப் பறித்த ஆட்சியை விரட்டிட, 2024 நாடாளுமன்றத் தேர்தல் களமே சரியான வாய்ப்பாகும் என்கிற உறுதியான நம்பிக்கையுடன் இந்தியா கூட்டணியில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தோள் கொடுக்கும் தோழமைக் கட்சிகளுடன் களத்தைச் சந்திக்கிறோம்.



**தோழமைக் கட்சிகளுடன் களத்தைச் சந்திக்கிறோம்!**

2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பே தோழமைக் கட்சியினருடன் ஏற்பட்ட கொள்கை உறவு, தேர்தல் கூட்டணியாக இணைந்து 2019 நாடாளுமன்றத் தேர்தல் களம், 2021 சட்டமன்றத் தேர்தல் களம், ஊரக உள்ளாட்சித் தேர்தல் களம், மாநகராட்சி நகராட்சித் தேர்தல் களம் என அனைத்திலும் தொடர் வெற்றியைப் பெற்று வருகிறோம். ஐந்தாவது முறையாகத் தொடரும் இந்த கொள்கை அடிப்படையிலான வெற்றிக் கூட்டணியை அமைத்துள்ள தோழமைக் கட்சியினருக்கு உரிய வகையில் இடங்களை ஒதுக்கி, தொகுதிப் பங்கீடுகளைச் செய்யும் ஜனநாயகப்பூர்வமான நடைமுறையை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

**தோழமை இயக்கங்களிடம் உரிய முறையில் விளக்கம்!**

பாசிசத்தை வீழ்த்திட வேண்டும் என்கிற ஒற்றை இலக்குடனான இந்தப் பயணத்தில், ஒரு சில ஜனநாயக இயக்கங்களுக்குத் தொகுதி ஒதுக்க இயலாத சூழல் ஏற்பட்டிருப்பது உண்மையில் எனக்கும் வருத்தத்தைத் தருகிறது. தொகுதிகளின் மொத்த எண்ணிக்கையையும் கூட்டணியின் வலிமையையும் கருத்தில் கொண்டு, இதுகுறித்து அனைத்துத் தோழமை இயக்கங்களிடமும் என் சார்பிலும் கழகத்தின் சார்பிலும் விளக்கப்பட்டுள்ளது.

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் யாரை வீழ்த்த வேண்டும், அதற்கு எந்த வகையில் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதைத் தொகுதிப் பங்கீட்டில் வாய்ப்பு பெறாத தோழமைக் கட்சியினரும் உணர்ந்து, உளப்பூர்வமான ஆதரவை நல்கி, தேர்தல் பணியாற்ற முடிவெடுத்திருப்பது ஆக்கப்பூர்வமான ஜனநாயகப் பண்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற மனிதநேய மக்கள் கட்சிக்கும், தமிழக வாழ்வுரிமைக் கட்சிக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இடம் ஒதுக்க இயலாமல் போன நிலையிலும், மதவெறி பாசிசத்தை வீழ்த்திடத் தி.மு.க தலைமையிலான கூட்டணிக்குப் பக்கபலமாக இருப்போம் என அக்கட்சிகளின் நிர்வாகிகள் முடிவெடுத்து ஆதரவைத் தெரிவித்திருப்பதை வரவேற்கிறேன். மனதார நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

> **“ 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில், “நாற்பதும் நமதே! நாடும் நமதே!” என்கிற வகையில் இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி அடைந்திடவும், இந்திய ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்திக் காட்டிடவும் தங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன். ”**

**ஆதரவு தெரிவித்த கட்சிகளுக்கு நன்றி!**

அதுபோலவே, இந்தியா கூட்டணி வெற்றி பெறக் களப்பணியாற்ற முன்வந்துள்ள அனைத்து ஜனநாயக இயக்கங்களுக்கும், நேரில் வந்து ஆதரவு தெரிவித்து வரும் அமைப்பினருக்கும் நன்றியினை உரித்தாக்குவதோடு, 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில், “நாற்பதும் நமதே! நாடும் நமதே!” என்கிற வகையில் இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி அடைந்திடவும், இந்திய ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்திக் காட்டிடவும் தங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

ஒன்றுபட்டு நிற்போம்! வென்றுகாட்டியே தீருவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க. கூட்டணிக்கு பல்வேறு கட்சிகள் - அமைப்புகள் ஆதரவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, மார்ச் 20 -

தி.மு.க. தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் நிர்வாகிகளும் நேரில் சந்தித்து மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

தி.மு.க. தலைவர் முதல்வர் ஸ்டாலின் அவர்களை நேற்று காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் மனித நேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா சந்தித்தார். எதிர்வரும் மக்களவை தேர்தலில் தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற மனித நேய மக்கள் கட்சி தீவிரமாக பாடுபடும் என அவர் தெரிவித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜவாஹிருல்லா, நாட்டில் ஜனநாயகம், மதசார்பின்மை, கூட்டாட்சி தத்துவம் நிலைத்து நிற்க வேண்டும் என்ற அடிப்படையில் தி.மு.க. கூட்டணிக்கு மனிதநேய மக்கள் கட்சி முழுமையான ஆதரவளிக்கும் என தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி மற்றும் அந்த கட்சியின் நிர்வாகிகள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

அதேபோல் கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் பொன் குமார் நேரில் சந்தித்து தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். சமத்துவ மக்கள் கழக தலைவர் எர்ணாவூர் நாராயணன், மக்கள் விடுதலை கட்சி தலைவர் முருகவேல் ராஜன்,

ஆதித்தமிழர் பேரவை கட்சியின் பொதுச்செயலாளர் அதியமான் ஆகியோர் நேரில் சந்தித்து நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கான ஆதரவை தெரிவித்தார். தமிழ் புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவனும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார்.

காணொலிக் காட்சி வாயிலாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# இன்று மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் இன்று (20.03.2024 - புதன்கிழமை) நண்பகல் 12.00 மணி அளவில், காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.



‘அண்ணா அறிவாலயம்”
சென்னை - 600 018.
நாள்: 19.3.2024.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 20-03-2024

# சீர்மரபினர் கோரிக்கை சீரானது!

சீர்மரபினர் இன மக்களுக்கு ஒரே மாதிரியான சான்றிதழ் வழங்குவதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அம்மக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தான் சீர்மரபினர் நல வாரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சீரமைத்தார்கள். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரைத் தலைவராக கொண்டு சீர்மரபினர் நலவாரியத்தை திருத்தியமைத்து முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டுக்காக 'சீர்மரபினர் நல வாரியம்', 2007-ம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஒய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்த வாரியத்தை கடந்த நவம்பர் மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றி அமைத்தார்கள்.

**சீர்மரபினர் நல வாரியத்துக்கு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தலைவராகவும், ராசா அருண்மொழியைத் துணைத் தலைவராகவும் நியமித்தார் முதலமைச்சர் அவர்கள். அத்துடன் கே.எஸ்.ராஜ்கவுண்டர், சேகர், பசுவை சக்திவேல், முனுசாமி, எஸ்.கணேசன், கே.எஸ்.கண்ணன், கதிர்வேல், பண்ணப்பட்டி கோவிந்தராஜ், ப.சந்திரன், சூர்யா பி.தங்கராஜா, பெரி.துரைராசு, பாண்டீஸ்வரி மற்றும் பெரியசாமி ஆகிய 13 பேரை அரசு சாரா உறுப்பினர்களாக நியமித்து 3 ஆண்டு காலத்துக்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சீர்மரபினர்களின் மிக முக்கியக் கோரிக்கையான இரட்டைச் சான்றிதழ் குழப்பத்துக்கும் முதலமைச்சர் அவர்கள் முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள்.**

சுதந்திரம் பெறுவதற்கு முன் ஆங்கிலேய ஆட்சியில் குற்றப்பரம்பரை சட்டத்தினால் (Criminal Tribes Act) பாதிக்கப்பட்ட வகுப்பினர்கள், சீர்மரபினர் வகுப்பு என வகைப்படுத்தப் பட்டார்கள். மொத்தம் 68 வகையான பிரிவு மக்கள் இப்படி அழைக்கப்பட்டார்கள். இவர்கள் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவர்களுக்கு தரப்பட்ட சான்றிதழ் குழப்பமானதாக இருந்தது.

சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities மற்றும் Denotified Tribes என இரண்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இது பல்வேறு குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தியது. 'இதனை அகற்றுவதற்கான முயற்சியை எடுப்போம்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். அந்த இரட்டை சான்றிதழ் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள்.

**மாநில அரசின் உதவிகள் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNC) என அழைக்கப்படுவர் எனவும், ஒன்றிய அரசின் நலத் திட்ட பயன்களைப் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNT) என அழைக்கப்படுவர் என 2019 ஆம் ஆண்டு குழப்பமான ஆணை வெளியிடப்பட்டது. இரண்டு சான்றிதழ் குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities / Denotified Tribes என ஒரே சான்றிதழ் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இனி வருவாய் அலுவலர்கள் சீர்மரபின வகுப்பினர்களுக்கு ஒரே சான்றிதழ் வழங்குவார்கள் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.**

முதன்முதலாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் ஏ.என்.சட்டநாதன் தலைமையில் 13.11.1969 ஆம் நாள் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுவை அமைத்தார்கள். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனை மேம்படுத்துவதற்காக இதனை அமைத்தார்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையை உருவாக்கினார்கள். அந்தப் பரிந்துரைப்படி சமூகநீதியை அமல்படுத்தினார்கள். பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவிகித இடஒதுக்கீடு வழங்கினார்கள். பிற்படுத்தப்பட்டோருக்கு தனியே ஒரு அமைச்சரை 1971 ஆம் ஆண்டு நியமித்ததும் கலைஞர் அவர்கள்தான்.

**மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு தனி ஒதுக்கீடு தேவை என்ற கோரிக்கை எழுந்தபோது, பிற்படுத்தப்பட்டோருக்கு இருந்த 50 விழுக்காட்டில் 20 விழுக்காட்டை மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு வழங்கியவரும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான். 1989 ஆம் ஆண்டு புது இடஒதுக்கீடு உரிமையை உருவாக்கி கல்வி, வேலை வாய்ப்பில் இந்த சமூக மக்கள் முன்னேற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர் முதல்வர் கலைஞர் அவர்கள். மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இயக்குநரகம் 1989 ஆம் ஆண்டு கலைஞர் அரசால் உருவாக்கித் தரப்பட்டது.**

சீர்மரபினருக்கு இளங்கலை வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்க உத்தரவிட்டதும் கழக அரசே. இதே வகுப்பைச் சேர்ந்த மாணவியர் கல்வி மேம்பாட்டுக்காக ஆண்டு தோறும் நிதி வழங்கியதும் கழக அரசே. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர் மேல் நிலைத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றால் நிதி உதவி வழங்கியதும் கழக அரசே. பாலிடெக்னிக் படிக்கவும், ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெறுவதற்கான தேர்வுக்கு தயாராகவும் நிதி உதவி வழங்கப்பட்டது. கனரக வாகனங்கள் இயக்கக் கற்றுக் கொள்ளவும் நிதி வழங்கப்பட்டன. வீட்டுமனை வழங்கும் திட்டத்தில் இணைக்கப்பட்டார்கள்.

அரசு பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பிரதிநிதித்துவம் சரியாக இருக்கிறதா என ஆராய 1998 ஆம் ஆண்டு குழு அமைத்தவர் முதலமைச்சர் கலைஞர். அக்குழுவின் அனைத்து பரிந்துரைகளையும் ஏற்றுச் செயல்படுத்திக் கொடுத்தவர் முதல்வர் கலைஞர். உரிய பணியிடங்களை ஐந்தாண்டு காலத்துக்குள் நிரப்ப வேண்டும் என்று சொன்னார் கலைஞர். இது தொடர்பான வெள்ளை அறிக்கையை 11.5.2000 அன்று சட்டமன்றத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் தாக்கல் செய்தார்.

அரசு பணியிடங்களில் முதல் பத்து இடத்தில் ஒரு பிற்படுத்தப்பட்டவருக்கு என்பதை, இரண்டு இடமாக 2001 ஆம் ஆண்டில் மாற்றி அமைத்தவர் முதலமைச்சர் கலைஞர். ஒவ்வொரு பத்து இடத்திலும் இரண்டு பிற்படுத்தப்பட்டவர் இடம் பெற பாதை அமைத்தவர் கலைஞர்.

இதன் தொடர்ச்சியாகத்தான் சீர்மரபினரின் கோரிக்கையை சீர் செய்துள்ளார் திராவிட மாடல் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. கூட்டணியில் மக்களவைத் தேர்தலில் ம.தி.மு.க. சார்பாக திருச்சியில் போட்டியிடும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழகச் செயலாளர் துரை வையாபுரி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. கூட்டணியில் மக்களவைத் தேர்தலில் நாமக்கல்லில் போட்டியிடும் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் சூர்யா மூர்த்தி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவர் ஈ.ஆர். ஈஸ்வரன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### பிரதமர் தகுதிக்கேற்ப மோடி பேச வேண்டும்; பத்தாண்டு பா.ஜ.க.வின் அழிவு ஆட்சியிலிருந்து விடுபெற

# 'இந்தியா' கூட்டணிக்கு மக்கள் வாக்களிக்கத் தயாராகி விட்டார்கள்!

## சேலம் கூட்டத்தில் பேசிய மோடிக்கு - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. பதிலடி!

**சென்னை, மார்ச் 20-**

**'பிரதமர், அவர் தகுதிக்கு ஏற்ப பேசுகிறாரா? பத்தாண்டு அழிவு ஆட்சியில் இருந்து விடுதலை பெற இந்தியா கூட்டணிக்கு வாக்களிக்க மக்கள் தயாராகிவிட்டார்கள்' என சேலத்தில் பிரதமர் மோடி ஆற்றிய உரைக்கு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி, பதிலடி கொடுத்துள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு :

வாரம் தோறும் தமிழ்நாட்டுக்கு வருவதையே வாடிக்கையாக வைத்திருக்கும் பிரதமர் மோடி இந்த வாரம் சேலத்தில் முழங்கி விட்டுப் போயிருக்கிறார். பத்தாண்டு காலம் பிரதமராக இருந்தவர், தனது சாதனைகளைச் சொல்லி வாக்கு கேட்டிருக்க வேண்டும். அப்படி ஏதும் இல்லாததால் வாய்க்கு வந்ததை எல்லாம் பேசி இருக்கிறார்.

தமிழ்நாட்டில் பா.ஜ.க.வுக்குக் கிடைக்கும் ஆதரவைப் பார்த்து தி.மு.க.வின் தூக்கம் தொலைந்து விட்டது" எனப் பேசியிருக்கிறார். மோடி அவர்களே! உங்களுக்குத் தான் தூக்கம் தொலைந்துவிட்டது. அதனால் தான் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வந்து புலம்பிவிட்டுப் போகிறீர்கள்.

### மோடியின் பிரதமர் பதவிக்கு நிரந்தர ஓய்வு!

கடந்த தேர்தல் காலங்களில் இந்தியப் பிரதமர்கள் ஓரிரு முறை தான் தமிழ்நாட்டுக்கு வந்து பிரசாரம் செய்துவிட்டு போனார்கள். ஆனால், உங்களுக்குத் தூக்கம் வராததால் பல்லடம், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, சென்னை, கன்னியாகுமரி, கோவை, சேலம் என அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வந்து பிரசாரம் செய்கிறீர்கள். உங்கள் பிரதமர் பதவிக்கு நிரந்தர ஓய்வு கொடுக்க தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, இந்திய மக்கள் அனைவரும் தயாராகி விட்டார்கள்.

சேலம் ஆடிட்டர் ரமேஷ் குறித்துப் பேசி கண்ணீர் விட்டிருக்கிறார் மோடி.

ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது தான் சேலத்தைச் சேர்ந்த பாஜக பிரமுகர் ஆடிட்டர் ரமேஷ் 2013ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டார். 11 ஆண்டுகள் கழித்து இப்போது நினைவு கூர்வது ஏன்?

கோவையில் ரோட் ஷோ நடத்திய போது 1998ல் நடந்த குண்டு வெடிப்பில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியை நடத்தினார்கள். இத்தனை ஆண்டுகள் கழித்து இப்படியான நாடகத்தை தேர்தலுக்காக பாஜக நடத்த ஆரம்பித்திருக்கிறது. ரோட்டில்ஷோ காட்டினாரே தவிர அதைப் பார்க்கத்தான் ஆள் இல்லை.

### ஜெயலலிதா ஆட்சியில் பா.ஜ.க. ஆதரவாளர்கள் கொல்லப்பட்டதை மறந்துவிட்டாரா?

ஜெயலலிதா ஆட்சியில் மட்டும் சேலம் ஆடிட்டர் ரமேஷ், பரமக்குடி முருகன், மதுரை சுரேஷ், வேலூர் அரவிந்தன், வெள்ளையப்பன், சென்னை சுரேஷ் உள்ளிட்ட பாஜக ஆதரவாளர்கள் பலர் கொலை செய்யப்பட்டனர். இதை எல்லாம் பழைய பாஜகவினரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும். அந்த ஜெயலலிதாவை தான் சேலம் கூட்டத்தில் புகழ்ந்து பேசி இருக்கிறார் பிரதமர். "ஜெயலலிதாவை தி.மு.க,வினர் எவ்வளவு இழிவுபடுத்தினர் என்பதை நினைத்துப் பாருங்கள்" எனப் பேசியிருக்கிறார் மோடி. அந்த ஜெயலலிதா ஆட்சியில்தான் இவர்கள் கொல்லப்பட்டனர் என்பதை மோடி அவர்களே நினைத்துப் பாருங்கள்.

எம்.ஜி.ஆரையும், ஜெயலலிதாவையும் மோடி புகழ்வதைப் பார்த்து அதிமுகவினர் மிக ஏளனமாக பேட்டி அளித்தார்கள். எதற்காக இவர்கள் பேரை நீங்கள் பயன்படுத்துகிறீர்கள் என்று கூட வெளிப்படையாக பேட்டி அளித்தார்கள். ஆனாலும் ஜெயலலிதாவை மறக்கவில்லை மோடி.

'குஜராத் மோடியா? தமிழ்நாட்டு லேடியா?' என்று ஜெயலலிதா கேட்டதை தமிழ்நாட்டு மக்கள் மறக்கவில்லை. மோடி வேண்டுமானால் மறந்திருக்கலாம். பதவி ஆசை அவரை பாடாகப் படுத்துகிறது. போகிற போக்கைப் பார்த்தால் ஜெயலலிதாவின் சமாதிக்கே சென்று கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்து விடுவார் போல!

### ஊழலைப் பற்றி பேசி உத்தமர் வேஷம் போடும் மோடி!

"திமுக, காங்கிரசின் ஊழலைப் பற்றி பேச ஒருநாள் போதாது" எனச் சொல்லியிருக்கிறார் மோடி. ஊழலைப் பற்றி பேச மோடிக்குத் தகுதி இருக்கிறதா? தேர்தல் பத்திரம் திட்டத்தில் பாஜக நடத்திய தில்லு முல்லு நாடு முழுவதும் நாறிக் கொண்டிருக்கிறது. தேர்தல் பத்திரங்கள் மூலம் கிடைத்த நிதியில் 50 சதவிகிதத்திற்கு மேல் பாஜகதான் வாங்கியது. சிபிஐ, அமலாக்கத் துறை, வருமானவரித் துறை போன்ற அதிகார அமைப்புகளை ஏவி, அதன் மூலம் நிறுவனங்களிடம் இருந்து நன்கொடைகளை மிரட்டிப் பறித்த பாஜக உத்தமர் வேஷம் போடுகிறது. கொள்ளையை சட்டபூர்வமாக ஆக்கிய கட்சி பா.ஜ.க.

காங்கிரஸ் ஆட்சியில் நடந்த 2 ஜி அலைக்கற்றை பற்றிப் பேசியிருக்கிறார் மோடி. 2ஜி அலைக்கற்றை முறைகேடு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை டெல்லி சிபிஐ நீதிமன்றம் 2017ல் விடுதலை செய்துவிட்டது. அதன் பிறகும் திமுகவின் பங்கு பற்றி மோடி வலிந்து பேசிக் கொண்டிருக்கிறார். 2022 ஆகஸ்டில் 5 லட்சம் கோடி ரூபாய்க்கு ஏலம் போக வேண்டிய 5ஜி அலைக்கற்றை 1 லட்சம் கோடி ரூபாய்க்குத்தான் ஏலம் போனது. மீதி பணம் யார் பாக்கெட்டிற்கு போனது? என மோடி பதில் சொல்வாரா?

பெண் சக்தி பற்றியெல்லாம் பெருமை பொங்கப் பேசியிருக்கிறார் மோடி. "பெண்களுக்குச் சேவை செய்ய உறுதி ஏற்று இருக்கிறோம். பெண்கள்தான் பாஜகவின் கவசமாக உள்ளது" என்றெல்லாம் பொய்களைக் கொட்டியிருக்கிறார் மோடி. மணிப்பூரில் நின்று மோடியால் இப்படிப் பேச முடியுமா? மணிப்பூரில் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்ற காட்சிகள் சர்வதேச அளவில் இந்தியாவிற்குத் தலைகுனிவை ஏற்படுத்தியது. அந்த மணிப்பூருக்குச் சென்று பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆறுதல் சொன்னாரா? அந்த பாவம் எல்லாம் எந்த கங்கையில் குளித்தாலும் போகாது.

### பேரிடர் நிவாரணம் கூட வழங்காத மோடி தமிழ்நாட்டை காப்பாற்றுவாரா?

"தமிழகத்தைப் புண்ணிய பூமியாக மாற்றுவோம்" என்கிறார் மோடி. திருநெல்வேலியும் தூத்துக்குடியும் சென்னையும் பெரு வெள்ளத்தில் சிக்கி பேரிடர் நிவாரணம் கேட்டு தமிழ்நாடு கையேந்திய போது ஒரு பைசாவும் தராத மோடி தான், தமிழகத்தைப் புண்ணிய பூமியாக மாற்ற போகிறாராம். "ஏப்ரல் 19ம் தேதி தமிழகத்திலிருந்து தான் எதிர்க்கட்சிகளுக்கு அழிவு தொடங்கப் போகிறது" என சொல்லியிருக்கிறார் மோடி. பத்தாண்டு அழிவு ஆட்சியில் இருந்து மக்கள் விடுதலை பெற இந்தியா கூட்டணிக்கு வாக்களிக்கத் தயாராகிவிட்டார்கள். ஏப்ரல் 19ம் தேதிதான் பாஜகவுக்கு பேரழிவுக் காலம் தொடங்கப் போகிறது.

### தோல்வி உறுதி எனத் தெரிவதால் தரம் தாழ்ந்து பேசுகிறார் மோடி!

ஒரு பிரதமர், அவர் தனது தகுதிக்கு ஏற்ப பேச வேண்டும். பாஜகவின் நாலாந்தரப் பேச்சாளரைப் போல பேசக் கூடாது. மீறி, மோடி அப்படி பேசுகிறார் என்றால் தோற்கப் போகிறோம் என்பதை அவரே உணர்ந்து விட்டார் என்பது தெரிகிறது. 400 தொகுதிகள் வெற்றி பெறப் போவதாக அவர் சொல்லிக் கொள்கிறார். உண்மையில் 400 தொகுதிகள் வெற்றி பெறப் போகிறவர் இப்படி தரந்தாழ்ந்து பேச மாட்டார்.

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் பொது செயலாளரும், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத் தலைவருமான பொன் குமார் நிர்வாகிகளுடன் சந்தித்து மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, துணை பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### காலாவதியான தேர்தல் நன்கொடை பத்திரங்களை பணமாக்க

# பா.ஜ.க.வுக்கு ஒன்றிய நிதி அமைச்சகம் உதவி!

## தேர்தல் பத்திரங்கள் தொடர்பான ஆய்வு அமைப்பு அம்பலப்படுத்தியது!

புதுடெல்லி, மார்ச் 20-

தேர்தல் நன்கொடை பத்திரங்களை வாங்கிய தேதியிலிருந்து 15 நாட்களில் அரசியல் கட்சிகள் அதனை வங்கியில் செலுத்தி பணமாக்கி கொள்ள வேண்டும். 15 நாட்களை கடந்தால் அந்த தேர்தல் பத்திரம் காலாவதியாகி விடும்.

அத்தகைய தேர்தல் பத்திரங்களின் பணத்தை பிரதமரின் நிவாரண நிதிக்கு பாரத ஸ்டேட் வங்கி அனுப்பிவிட வேண்டும்.

இந்த நிலையில், காலாவதியான தேர்தல் பத்திரங்களை பா.ஜ.க. பணமாக்குவதற்கு ஏதுவாக, தேர்தல் பத்திர விதிமுறையை தளர்த்தி, ஒன்றிய நிதி அமைச்சகம் உதவி செய்திருப்பது தற்போது அம்பலமாகியுள்ளது.

கர்நாடக சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக பெங்களூருவில் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான 20 தேர்தல் பத்திரங்களை 2018 ஆம் ஆண்டு மே ஐந்தாம் தேதி பா.ஜ.க. வாங்கியது. இதில் 10 கோடி ரூபாய் மதிப்பிலான பத்திரங்கள் 15 நாட்களை கடந்து காலாவதியான நிலையில், டெல்லியிலுள்ள பாரத ஸ்டேட் வங்கியில் 2018 ஆம் ஆண்டு மே 23ஆம் தேதி பணமாக்கப்பட்டுள்ளது. இதற்காக பாரத ஸ்டேட் வங்கியின் டெல்லி கிளை, மும்பையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியின் தலைமை அலுவலகம், ஒன்றிய நிதி அமைச்சகம் ஆகிய மூன்றும் 24 மணி நேரத்தில் கடிதப் போக்குவரத்து நடத்தி சிறப்பு அனுமதி வழங்கியிருப்பது தெரியவந்துள்ளது.

15 நாளில் காலாவதி ஆகும் என்பதை 15 வேலை நாட்கள் என்று இந்த ஒரு முறை மட்டும் கருதி இந்த பத்திரங்களைப் பணமாக்க அனுமதிக்கலாம் என்று நிதி அமைச்சகம் சிறப்பு அனுமதி வழங்கி பா.ஜ.க.வுக்கு சாதகமாக நடந்து கொண்டிருப்பது இப்போது அம்பலமாகியுள்ளது. இந்த விவரங்களை தேர்தல் பத்திரங்கள் தொடர்பாக தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வரும் ரிப்போர்ட்டர்ஸ் கலெக்டிவ் அமைப்பு வெளியிட்டுள்ளது.

### நாட்டின் அமைதி - நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் செயல்! ஒன்றிய இணை அமைச்சர் ஷோபா மீது

# தேர்தல் ஆணையம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, மார்ச் 20–**

**நாட்டின் அமைதி – நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் ஒன்றிய இணை அமைச்சர் ஷோபா மீது தேர்தல் ஆணையம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.**

அவரது அறிக்கை வருமாறு :

பெங்களூரு ராமேஸ்வரம் கபே குண்டுவெடிப்பு வழக்கில் தமிழர்களைத் தொடர்புபடுத்தியுள்ள ஒன்றிய பா.ஜ.க. இணையமைச்சர் ஷோபா கரந்த்லஜே அவர்களின் பொறுப்பற்ற பேச்சுக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேசுவதற்கு அவர் ஒன்று, என்.ஐ.ஏ அதிகாரியாக இருக்கவேண்டும், அல்லது இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்வுடன் நெருங்கிய தொடர்புடையவராக இருக்க வேண்டும். கண்டிப்பாக இப்படிப் பேச அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை. தமிழர்களோடு கன்னடர்களும் பா.ஜ.க.வின் இந்த பிளவுவாதப் பேச்சை நிராகரிப்பார்கள்.

நாட்டின் அமைதி, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவித்ததற்காக ஷோபா மீது தக்க சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறேன்.

பிரதமரில் இருந்து தொண்டர்கள் வரை பா.ஜ.க.வில் இருக்கும் அனைவரும் இத்தகைய அசிங்கமான, பிரிவினை அரசியலை உடனே நிறுத்த வேண்டும்.

தேர்தல் ஆணையம் ஷோபாவின் வெறுப்புப் பேச்சைக் கவனித்து அவர் மீது உடனடியாகக் கடும்நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்பில்

# நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும்!

## திரிணாமுல் காங்கிரஸ் வலியுறுத்தல்!

கொல்கத்தா, மார்ச் 20-

நாடாளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பல்வேறு தில்லுமுல்லுகளை செய்து தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்ற நினைப்பில் பா.ஜ.க., இருந்து வருகிறது.

இந்நிலையில், தேர்தல் ஆணையம் பா.ஜ.க.,வின் கைப்பாவையாக செயல்பட்டு வருவதாக அரசியல் கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன. நியாயமான முறையிலும், நேர்மையான முறையிலும் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சி எம்.பி., டெரிக் ஓபிரையன் வெளியிட்டுள்ள சமூகவலைத்தளப் பதிவில், தேர்தல் ஆணையத்தை கட்சி அலுவலகமாக மாற்றி பா.ஜ.க., நாசப்படுத்தி விட்டதாகவும், களத்தில் மக்களை சந்திக்க அக்கட்சி பயப்படுவதாகவும் சாடியுள்ளார்.

நியாயமான, நேர்மையான தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே அனைவரது நோக்கம் என்று தெரிவித்துள்ள அவர், உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்பில் நாடாளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை உச்சநீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டு கொண்டுள்ளார்.

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர்கள் அறிவிப்பு

# சிதம்பரம் - தொல் திருமாவளவன், விழுப்புரம் - ரவிக்குமார்!

சென்னை, மார்ச் 20-

விடுதலைச் சிறுத்தைகள்கட்சி சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் சிதம்பரம், வழுப்புரம் தொகுதிகளில் போட்டி யிடுவோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிய விபரம் வருமாறு:-





சென்னை அசோக்நகரில் உள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அலுவலகத்தில், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிதம்பரம் தொகுதியில் தொல். திருமாவளவனும், விழுப்புரம் தொகுதியில் ரவிக்குமாரும் மீண்டும் போட்டியிடுவதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் அறிவித்தார்.

### நாடாளுமன்றத் தேர்தல் :

# ஈரோடு தெற்கு மாவட்ட ‘இந்தியா’ கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, மார்ச் 20-

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் குறித்து விவாதித்திட ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெறும் இந்தியா கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கழகத்தினர், கூட்டணிக் கட்சியினரின் செயல்வீரர்கள், நிர்வாகிகளும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான சு. முத்துசாமி அறிவித்துள்ளார்.

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி அறிக்கை வருமாறு :



வருகின்ற நாடாளுமன்ற தேர்தலையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட I.N.D.I.A கூட்டணி செயல் வீரர்கள் கூட்டம் வரும் 22.3.2024 வெள்ளிக்கிழமை அன்று மாலை 5 மணியளவில் ஈரோடு மேட்டுக்கடை தங்கம் மஹாலில் நடைபெற உள்ளது.

எனவே I.N.D.I.A கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக செயலாளர்கள் உட்பட நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் மற்றும் தோழமை கட்சிகளின் செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் .

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் சு.முத்துசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

### திருவாரூர் வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அழைப்பு!

திருவாரூர், மார்ச் 20 -

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்கள்திருவாரூர்வருவதையொட்டி அவருக்கு திருவாரூர் மாவட்டக் கழகம்சார்பில்பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. இதுகுறித்து மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்ற மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் மூத்த ஒன்றிய செயலாளர் வலங்கைமான் அன்பரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்குதலைமை செயற்குழுஉறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ். பாண்டியன், கோ.செல்வம், மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கே.எஸ். எஸ்.தியாகபாரி, டி.செந்தில்,மாவட்டதுணைசெயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், சாந்தி பாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் :-

மண்ணின்மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூருக்கு தேர்தல்பரப்புரைபொதுக்கூட்டத்திற்கு வருகைதரும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முதல்வர், இந்திய துணைப்பெருங்கண்டமே வியந்து போற்றும் திராவிட நாயகர் தளபதி அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட கழகம் சார்பில் பிரமாண்டவரவேற்பளிப்பதுடன் , கொரடாச்சேரியில் நடைபெறும் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்மற்றும்வார்டு ,கிளைகழகங்களில்இருந்து பெருந்திரளாக கலந்து கொள்வது .

ஒன்றியபிஜேபிஅரசின் பாசிச ஆட்சியை அகற்றி இந்தியாவை காக்க நடைபெறும்பாராளுமன்றதேர்தலில் , திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி தேர்தல் பணியாற்றி புதுச்சேரி உள்ளிட்டநாற்பதுதொகுதிகளிலும் வெற்றி பெறுவது, தமிழ்நாட்டிலேயே நாகப்பட்டினம் தொகுதியில் கழக கூட்டணியை அதிக வாக்குகள் வித்தியாசத்தில்வெற்றிபெறசெய்ய அயராதுதேர்தல்பணியாற்றுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டம் முடிவில் நகர செயலாளர் வாரை எஸ். பிரகாஷ் நன்றி கூறினார், கூட்டம் முடிந்து கூட்டத்தில் பங்கேற்ற மாவட்ட ஒன்றிய ,நகர , பேரூர் செயலாளர்களும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்களும் கழக தலைவர் தளபதி அவர்கள் பங்கேற்கவிருக்கும்கோரடச்சேரிபொதுக் கூட்டம் நடைபெறவிருக்கும் திடலை மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தலைமையில் பார்வையிட்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

நீலகிரி மாவட்டம், கீழ்குந்தா பேரூரைச் சேர்ந்த டி.கே.எஸ்.பாபு அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் போளிவாக்கம் ஊராட்சியில் கோமதி நகர் மற்றும் விஜயா நகரில் தலா ரூ 5 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டடங்கள் மற்றும் போளிவாக்க சத்திரம் ( சேசாசலவரபுரம் ) அங்கன்வாடி மையத்திற்கு ரூ 5 இலட்சம் மதிப்பீட்டில் சுற்று சுவர் ஆகியவற்றை மக்கள் பயன்பாட்டிற்காக திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் க.திராவிட பக்தன், ஒன்றிய செயலாளர் கே. அரிகிருஷ்ணன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி. கே. நாகராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, ஒன்றிய கழக நிர்வாகிகள் கொப்பூர் டி. திலீப்குமார், செங்குட்டுவன், காஞ்சிபாடி பி. சரவணன், பாலசுப்பிரமணி,ஆர். வாசு, செல்வராஜ், ஊராட்சி மன்ற தலைவர் செல்வராணி சதீஷ்குமார், துணைத் தலைவர் ஜானகிராமன், முரளி, சண்முக ஆனந்தன், பாலாஜி, பாபு , வேலன், ரவிசெல்வன், வளையாபதி, மணி உள்ளிட்ட பொதுநல சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

# திருநெல்வேலி மாநகரம், நெல்லை பேட்டை பகுதி, 20வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், நெல்லை பேட்டை பகுதி, 20வது வட்டக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஏ.சேக் மன்சூர்** (94, எம்.ஜி.பி. சன்னதி தெரு, பேட்டை, திருநெல்வேலி) அவர்கள் 20வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் தலைவர்கள் ஆலோசனை கூட்டம் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் மற்றும் கூட்டணி கட்சியின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் தலைவர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நகராட்சியை மாநகராட்சி யாக அறிவித்த முதல்வருக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நன்றி தெரிவித்தார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் காரைக்குடி நகர் மன்றத்தலைவர் சே.முத்துதுரை ஆகியோர்.நன்றி தெரிவித்தார்கள்.



மார்ச் 1 ”மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா முன்னிட்டு 16.3.2024 அன்று சென்னை, முத்தியால்பேட்டை மேல்நிலைப்பள்ளி அருகில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக, துறைமுகம் கிழக்கு பகுதி சார்பில் நடைபெற்ற ”புதிய புறநானூறு திராவிட வரலாறு எனும் தலைப்பில் மாபெரும் கவியரங்கத்தை இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் திமுக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இக்கவியரங்கத்தில் பேராசிரியர் அப்துல் காதர் தலைமையில், கவிஞர் கபிலன், கவிஞர் விவேகா, கவிஞர் நெல்லை ஜெயந்தா, கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி, கவிஞர் தனிக்கொடி, கவிஞர் தமிழ் மணவாளன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் ஜி.எம். தேவன், பகுதி செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, 5வது மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமுலு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பிரதமர் மோடி நடத்திய ‘ரோடு ஷோ’:

# அப்பட்டமான தேர்தல்விதிமீறல்!

சேலம் / கோவை, மார்ச் 20 –

கோவையில் பிரதமர் மோடி நடடத்திய ரோடு ஷோ நிகழ்ச்சியில் பள்ளிக் குழந்தைகளை பங்கேற்க செய்தது அப்பட்டமான தேர்தல் விதி முறை மீறல் என்று பல்வேறு அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் சேலத்தில் பிரதமரை வரவேற்க தேர்தல் நடத்தை விதிகளை மீறி பதாகைகளை வைத்த பா.ஜ.க. வினர் தேர்தல் விதி முறை மீறியுள்ளனர் என்றும் குற்றம் சாட்டியுள்ளனர்.

கோவையில்நேற்று முன்தினம்ரோட்ஷோ நடத்தினார் பிரதமர் மோடி. இந்த ரோடு ஷோவில் பள்ளிக் குழந்தை களை பங்கேற்க செய்துள்ளனர்.

இது அப்பட்டமான தேர்தல் விதி மீறல் என்று பல்வேறு தரப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் சேலம் அருகே பிரதமர் மோடி வருகையை முன்னிட்டு, தேர்தல் நடத்தை விதிகளை மீறி பா.ஜ.க.வினர் பதாகைகளை வைத்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

சேலம் அருகே உள்ள கெஜல் நாயக்கன்பட்டியில் பா.ஜ.க. தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பிரதமர் மோடி வருகை தருவதை முன்னிட்டு, சீல நாயக்கன்பட்டி பகுதியில் பல்வேறு இடங்களில் பா.ஜ.க.வினர் பதாகைகளை வைத்துள்ளனர்.

மேலும், சேலம், மதுரை தேசிய நெடுஞ் சாலையில் ராட்சத பதாகைகளை வைத்துள்ள பா.ஜ.க.வினர், பா.ஜ.க. கொடிக் கம்பங்களை அமைத்து தேர்தல் நடத்தை விதிகளை மீறி யிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. பா.ஜ.க.வினர் மீது இந்திய தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மத்தியில் கோரிக்கை எழுந்துள்ளது.

### மற்ற மாநிலங்களை விட, தமிழகத்தில்

# வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருப்பவர்களின் எண்ணிக்கை குறைவு!

### கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. தகவல்!

திருப்பூர், மார்ச் 20-

மற்ற மாநிலங்களை விட, தமிழகத்தில் வறுமை கோட்டுக்குக் கீழ் இருப்ப வர்களின் எண்ணிக்கை குறைவு என்பதே திராவிட மாடல் ஆட்சி என்று கழக துணை பொதுச் செயலா ளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன் னாள் அமைச்சர் ஆ.ராசா எம்.பி. கூறினார்.

திருப்பூர் வடக்கு மாவட் டம், நீலகிரி நாடாளுமன்ற தொகுதி, அவிநாசி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட அவிநாசி ஒன்றியம், அவி நாசி பேரூர், திருமுருகன்பூண்டி ஒன்றி யம், திருமுருகன்பூண்டி நக ரம் ஆகியவைகளுக்கான, வாக்குச்சாவடி பாகநிலை முகவர்கள், வாக்குச்சாவடி பாக குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் ஆலோச னைக்கூட்டம் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பி னர் க.செல்வராஜ் தலைமை யில் அவிநாசி சட்டமன்ற தொகுதி பார்வையாளர், கழக மருத்துவர் அணி துணை செயலாளர் மருத்து வர் கோகுல் கிருபாசங்கர் வரவேற்புரையில் நடை பெற்றது.

இதில் மாவட்டக் கழக அவைத்தலைவர் க.நடரா ஜன், பொருளாளர் ச.சாமி நாதன், தலைமைச் செயற் குழு உறுப்பினர் எஸ். சரவணன்நம்பி, ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ். சிவப்பிரகாஷ் அவிநாசி, எஸ்.ஆர்.பழனிசாமி திரு முருகன்பூண்டி, க.பால்ராஜ் சேவூர், திருமுருகன்பூண்டி நகர கழக செயலாளர் மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி, அவிநாசி பேரூர் கழக செய லாளர் திராவிடன் வசந்த், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி. அவிநாசியப்பன், திருமுருகன்பூண்டி நகராட் சித் தலைவர் நா.குமார், அவிநாசி பேரூராட்சி தலை வர் தனலட்சுமி பொன்னு சாமி, மாவட்ட விவசாய அணி முன்னாள் அமைப்பா ளர் சு.செல்வரங்கம், வழக் கறிஞர் சு.பத்மநாபன், மாமன்ற உறுப்பினர் வெ.ராதாகிருஷ்ணன், மாவட்ட முன்னாள் கவுன் சிலர் சாந்தி, அவிநாசி நகர அவைத்தலைவர் இராயப் பன், பூண்டி நகர அவைத் தலைவர் கந்தசாமி, அவி னாசி ஒன்றிய அவைத்தலை வர் சிவசாமி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விவேக், மாவட்ட வழக்கறிஞர் அணி சு.பத்மநாபன், அவி நாசி ஒன்றிய குழு உறுப்பி னர்கள் சத்தியபாமா அவி நாசியப்பன், சேதுமாதவன், கார்த்தி, சீனிவாசன், மாவட்ட பிரதிநிதிகள் ராதாகிருஷ்ணன், நடரா ஜன், கணபதிசாமி, ஒன்றிய துணை செயலாளர்கள் சண் முகம், ரங்கசாமி உள்பட மாநில, மாவட்டக் கழக நிர் வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகி கள், உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதி கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பொது மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலா ளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஒன் றிய அமைச்சர் ஆ.இராசா பேசியதாவது :

திராவிட முன்னேற்றக் கழகத்தில் படிபடிப்படி யாக வளர்ந்து இந்த இடத் திற்கு வந்துள்ளேன். நம் கழ கத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்தில் கொரோனா உச்ச கட்டத் தில் இருந்தது, கடந்த 10 ஆண்டு காலம் தமிழகத்தில் இதற்கு முந்திய ஆட்சி செய்த அ.தி.மு.க. பழனி சாமி தமிழக அரசின் கஜா னாவை காலி செய்து விட்டு ஐந்து லட்சம் கோடி கடன் சுமையை வைத்து சென் றார். அதுமட்டுமல்லாமல் சென்னை வெள்ளம் பெரும் சுமையாக இருந்தது. இந்த காலகட்டத்தில் மத்திய அர சின் எந்த உதவியும் நமக்கு கிடைக்கவில்லை.



இவ்வளவு சுமைகளுக் கிடையிலும், நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் வெளிநா டுகளுக்கு சென்று 3 மாதத் தில் பல்வேறு தொழில் முதலீட்டுகளை தமிழகத் திற்கு கொண்டு வந்தார். இதன் மூலம் ரூ. 8 லட்சம் கோடி முதலீடு தொழில் துறையில் செய்யப் பட்டுள்ளது.

ஒன்றிய அரசு தொடர்ந்து மாநில அர சுக்கு தரவேண்டிய நிதியை தராமல் காலம் தாழ்த்தி வரு கிறது. தமிழக முன்னேற்றத் திற்காகவும், தமிழகமக்க ளின் நன்மைக்காகவும், முத லமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் பல்வேறு திட்டங் களை செயல்படுத்தி இந்தி யாவின் முன்னோடி மாநில மாக தமிழகத்தை முன்னேற்றப் பாதை யில் கொண்டு சென்று திராவிட மாடல் ஆட்சியை நடத்தி தமிழக மக்களுக்காக அய ராது உழைத்து வருகிறார்.

பாசிச பாரதீய ஜனதா ஆட்சியை எதிர்வரும் தேர் தலில் முறியடிக்கும் சக்தி கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மட்டுமே உண்டு, நாடாளுமன்றத்தில் நடந்த கேள்வி நேர நிகழ்வு என்பது மிக,மிக முக்கிய மான ஒன்றாகும். இந்த கேள்வி நேரத்தில் ஒன்றில் கூட கலந்து கொள்ளாத ஒரே பிரதமர் நரேந்திர மோடி தான் என சவால் விட்டு சொல்கிறேன். உத்த ரபிரதேசம், குஜராத் மாநி லங்களை விட, தமிழகத்தில் வறுமைகோட்டுக்குக் கீழ் இருப்பவர்களின் எண் ணிக்கை குறைவு என்பதே திராவிட மாடல் ஆட்சி, பாசிசம், மதவாதத்திற்கு எதிராக போராடும் ஒரே முதல்வர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான். இந்தியாவையே காப் பாற்றக்கூடிய திறமையுள்ள ஒரே முதல்வர், நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல மைச்சர் தான். இந்திய அர சியல் சட்டம் காப்பாற்றப் பட வேண்டும் என்றால், இந்த தேர்தலை அனைவ ரும் பயன்படுத்தி, தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை வெற்றி பெற செய்ய நாம் அனைவ ரும் விருப்பு, வெறுப்பு இன்றி ஒற்றுமையாக செயல்பட வேண்டும். வரும் நாடாளுமன்ற தேர்தலில் நீலகிரி தொகுதி யில் தி.மு.க. நிச்சயம் வெற்றி பெறும். அதற்காக அனைவ ரும் ஒன்றுபட்டு தேர்தலில் பணியாற்றி நமது வெற் றியை முதலமைச்சருக்கு காணிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும். தமிழகத்தில் 40க்கு 40 மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் நாம் வெற்றி பெற செய்யும் சக்தி தி.மு.க வுக்கும், நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல மைச்சர் முத்துவேல் கருணா நிதி ஸ்டாலின் அவர்களுக்கு மட்டுமே உண்டு என்று மக் கள் முடிவு செய்துள்ளனர்.

இவ்வாறு கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச் சர் ஆ.ராசா தெரிவித்தார்.

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

திருச்சி வடக்கு மாவட்டம், தொட்டியம் மேற்கு ஒன்றியம், காட்டுப்புத்தூர் பேரூர் செயலாளர் கே.டி. செல்வராஜ், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19.03.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### மாணவர்களின் கல்வியை பாழ்படுத்திய

# பா.ஜ.க. – என்.ஆர். காங்கிரஸ் ஆட்சிக்கு எச்சரிக்கை!

### புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அறிக்கை!

புதுவை, மார்ச் 20-

புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



புதுச்சேரியின் கல்வி வளர்ச்சி இந்தியாவிலேயே முதலிடத்தில் இருந்தது ஒரு காலம். அதனால் தான் இரு பது ஆண்டுகளுக்கு முன்பே 100 சதம் கல்வி அறிவு பெற்ற மாநிலமாக புதுச் சேரி அறிவிப்பு செய்தது. அதன் தொடர்ச்சி தான் சிறிய நிலப்பகுதியான புதுச் சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் பகுதிகளில் கணக் கில் அடங்கா மருத்துவக் கல்லூரிகளும், பொறியியல் கல்லூரிகளும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், செவிலியர் உள்ளிட்ட மருத்துவ துணைக் கல்வி நிறுவனங்களும் உருவாகி இம்மாநிலமே கல்விக் கேந் திரமாக மாறியது.

ஆனால் இன்றைய பா.ஜ.க-என்.ஆர் காங்கிரஸ் அரசில் தலைகீழ் மாற்றங் கள் நிகழ்ந்து கொண்டிருக் கின்றன. ஒருபுறம் கல்வி நிறுவனங்கள் வணிக மாய மாகி மக்களை பணம் பறிக் கும் மரங்களாக மாற்றி விட்டு, மறுபுறம் அரசுப் பள்ளிகளின் தரத்தை முழு மையாக கீழே தள்ளி யுள்ளது.

முதலில் சிபிஎஸ்இ-ஐ எடுத்துக் கொள்வோம். முந் தைய ஆட்சியில் 1 முதல் 5 வரை இருந்த நிலை இந்த ஆட்சி வந்த பிறகு 6-ஆம் வகுப்பிற்கு தொடராமல் நிறுத்தப்பட்டது. மூன்று ஆண்டுகள் இடைவெளி யில் திடீரென்று அரசு விழித்துக்கொண்டு 6 முதல் 9 வகுப்பு வரை நீட்டிப்பாக அறிவிப்பு செய்தது. ஆனால் அதற்கான அடிப்படை கட் டுமானங்களை உருவாக்கி னார்களா என்றால் இல்லை. ஆசிரியர்களுக்கு புரிதல் இல்லாமலும், வேண் டிய பயிற்சி இல்லாமலும் அவர்கள் எந்த விதத்தில் பாடம் எடுப்பது. ஆண்டு நிறைவடையும் இன்றைய நிலையிலும் அவர்கள் பயிற்சி பெறவில்லை என்பது இந்த அரசின் அவலமாகும்.

அத்துடன் 100-க்கணக் கான ஆசிரியர் பணியிடங் கள் காலியாக உள்ளன. இவைகளை ஆண்டு துவக் கத்திலேயே நிரப்பி இருக்க வேண்டும். எவ்வித திட்ட மிடலும் இல்லாததால் அரசு அதில் கோட்டைவிட் டது. அவசரத்திற்கு ஒப்பந்த முறையில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களை பணிக்கு அமர்த்துவதாக கூறினர். அதுவும் நின்றுவிட்டது. புதி தாக நேரடி நியமனம் என்ற அறிவிப்பும் வந்தது. அது வும் நிறைவு பெறவில்லை. இறுதியில் ஆசிரியரிகள் இன்றி இவ்வாண்டு மாண வர்களின் படிப்பு பாழ்பட் டதுதான் மிச்சம்.

இதற்கிடையில் துணை நிலை ஆளுநரும், கல்வி அமைச்சரும் புதிய கல்விக் கொள்கையை இவ் வாண்டே திணிக்க உள்ள தாக போட்டியிட்டுக் கொண்டு அறிக்கைமேல் அறிக்கைவிட்டு மாணவர் களை குழப்பினர். அதிலா வது ஒரு தெளிவு உண்டா?. எது வரையில் புதிய கல்விக் கொள்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது. கல்விக் கொள் கையில் உள்ள எந்தெந்த அம்சங்கள் செயலாக்கத் திற்கு வந்துள்ளன என்பதை இவர்கள் தான் தெளிவுப டுத்த வேண்டும். ஒன்றிய பாஜக அரசையும், பிரதமர் மோடியையும் திருப்திப் படுத்த விளம்பரத்திற்காக மாணவர்கள் வாழ்வை இவர்கள் பாழ்படுத்தினார் களே தவிர எந்த பலனும் மாணவர்களுக்கு ஏற்பட வில்லை.

கல்வியில் கோட்டை விட்ட இவர்கள் மக்களை வசப்படுத்த மாலை சிற் றுண்டி என்றும், காலை வித விதமான பிஸ்கட் என்றும் பூ சுற்றுகிறார்கள். அவ்வ ளவு பெரிய தமிழ்நாட்டில் காலை சிற்றுண்டித் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்ப டுவதை நாடே ஆச்சர்யத்து டன் பார்க்கிறது. அரசுப் பள்ளிகள் மட்டுமின்றி அரசு உதவிபெறும் பள்ளிக ளுக்கும் அதனை விரிவுபடுத்த தமிழ்நாடு திராவிட மாடல் ஆட்சி நட வடிக்கை எடுத்து வருகிறது.

ஆனால் சின்னஞ்சிறு புதுச்சேரியில் இதைக்கூட இவர்களால் செய்ய முடிய வில்லை. முன்பு நடந்த காலை பால், ரொட்டி திட் டத்தை மூடியவர்கள் இவர் கள். அதில் பணியாற்றியவர் களையும் பரிதவிக்க விட்டவர்களும் இவர்கள் என்பது மாநிலம் அறிந்தது.

அன்று கல்வித் துறையில் ஆசிரியர்களைக் கொண்டு சத்தான மதிய உணவுத் திட் டத்தை சிறப்பாக நடத்தி வந்த நிலை இன்று மாறி கர் நாடக மாநிலத்தில் இருந்து ஆர்.எஸ்.எஸ். கூட்டத்தை இறக்கிவிட்டு அட்சயபாத் திரா என்ற பூண்டு, வெங்கா யமில்லா சத்தற்ற சக்கையை மதிய உணவாகப் போட அதனை மாணவர்கள் வாங்கி கீழே எரியும் நிலை தான் இன்று தொடர்கிறது. இதிலே ஒரு முட்டையை இவர்களாக சொருகி சத்துணவாக காட்ட முயற்சிக்கும் கோமாளித்த னத்தை என்னவென்பது.

கல்வித் துறையில் விளை யாட்டைப் பிரித்து தனித் துறை என்றனர். ஆனால் 500க்கும் மேற்பட்ட உடற் பயிற்சி ஆசிரியர், விரிவுரை யாளர் பதவிகளை காலி யாக வைத்து எந்த விளையாட்டை இவர்கள் வளர்த்தெடுக்க போகிறார் கள் தெரியவில்லை. 2019 வாக்கில் 50 உடற்கல்வி ஆசிரியர்களை அமர்த்து வதாக விண்ணப்பம் பெற்றவர்கள் தேர்வு நடத் திய நிலையிலும் இன்றும் பல ஆண்டுகளாக கிடப்பில் போட்டிருக்கிறார்கள்.

ஆகவே. இவர்களுக்கு கல்வி வளர்ச்சி பற்றியோ, மாணவர்களின் உடற்ப யிற்சி பற்றியோ, அவர்க ளுக்கு சத்தான உணவு அளிப்பது பற்றியோ அக்க றையில்லை. பெஸ்ட் புதுச் சேரி என்ற வெற்று விளம்ப ரமும், தேர்தலை முன் வைத்த பகட்டும்தான் இவர்களின் நோக்கம். இவர்களுக்கு பாடம் புகுட் டும் நேரம் நெருங்கிவிட் டது என்று இந்த மாணவர் விரோத ஆட்சியாளர்களை எச்சரிக்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

# ஆலத்தூர் மேற்கு ஒன்றியத்தில் முடிவுற்ற பணிகள்!

### எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

பெரம்பலூர், மார்ச் 20-

பெரம்பலூர் மாவட் டம், ஆலத்தூர் மேற்கு ஒன் றியத்தில் பெரம்பலூர் சட் டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சி களில் கலந்து கொண்டார்.

நாரணமங்கலம் ஊராட்சி, விஜயகோபால புரத்தில் ரூ.11.97 லட்சத் தில் கட்டப்பட்ட அங்கன் வாடி கட்டிடத்தை திறந்து வைத்தார். நாரணமங்கலத் தில் இருந்து மருதடிக்கு கூடு தல் பேருந்து வசதியை துவக்கி வைத்தார்.

திருவளக்குறிச்சி பிரிவு சாலையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ரூ.6.50 லட்சத்தில் பயணி யர் நிழற்குடைக்கு அடிக்கல் நாட்டிய எம்.எல்.ஏ., ஆலத் தூர் கேட், செட்டிக்குளத் தில் புதியதாக கட்டப் பட்ட பயணியர் நிழற் குடையை திறந்து வைத் தார்.

செட்டிக்குளத்தில் 2 இடத்தில் ரூ.16 லட்சத்தில் தார் சாலை அமைக்கும் பணியை துவக்கி வைத்த எம்.எல்.ஏ., அங்கு ரூ.5.20 லட்சத்தில் பெண்கள் சுகா தார வளாகம், ரூ.22 லட்சத் தில் நூலகம் கட்ட அடிக்கல் நாட்டினார். பின்னர் தேனூர் மேல்நிலைப்பள்ளி யில் ரூ.5.20 லட்சத்தில் பெண்கள் சுகாதார வளா கம் கட்ட அடிக்கல் நாட் டிய எம்.எல்.ஏ. பிரபாகரன், ரூ.1.47 லட்சத்தில் டி.களத் தூர் புதுஅம்மா பாளையம் இடையே புதியதாக அமைக்கப்பட்ட தார் சாலையை மக்கள் பயன் பாட்டுக்கு அர்ப்பணித்தார். எலந்தலப்பட்டியில் 60 ஆயி ரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, தையல் பயிற்சி கூடம் ஆகியவற்றை யும் திறந்து வைத்தார். இது தவிர பல்வேறு இடங்களில் புதிய சாலை பணி களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

இதில் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெக தீசன், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளரும், ஒன்றிய குழுத் தலைவரு மான என்.கிருஷ்ணமூர்த்தி, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், வட்டார வளர்ச்சி அலுவலர் சேகர், பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கீதா, ஆலத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பச்சியம் மாள்,

அரசுப் போக்குவரத்துக் கிளை மேலாளர் ராஜா, தொ.மு.ச. மாவட்ட கவுண் சில் பேரவை தலைவர் கே. கே.எம்.குமார், மாவட்ட பொருளாளர் சங்கர், நாரணமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் பத்மாவதி சந்திரன், இரூர் ஊராட்சி மன்றத் தலைவர் காந்திமதி ஆசைத்தம்பி,

மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் செல் வராஜ், மாவட்ட இளைஞ ரணி துணை அமைப்பாளர் அருண், வேளாண்மை அலு வலர் சௌமியா, வேளாண்மை துணை அலு வலர் ராமச்சந்திரன், வேளாண்மை உதவி அலுவ லர்கள் மணிகண்டன், கலிய பெருமாள், அட்மா திட்ட அலுவலர்கள் நல்லதம்பி, தனலட்சுமி, சுப்ரமணி, பயிர் அறுவடை பரிசோ தனை அலுவலர் கௌசல்யா மற்றும் ஞான சுந்தரம், விஜயகுமார், சீனி வாசன் கோபாலபுரம் செல் வராஜ், நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப. சுப்பிரமணியன்

**மார்ச் 20 (2002)**



**கழகம் துவங்கிய காலத்தில் கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, தனது பகுதியில் அறிஞர் அண்ணா பெயரில் படிப்பகம் நடத்தியவர்.**

**நெல்லிக்குப்பம் 4வது வார்டு கழகச் செயலாளராகவும், அதனைத் தொடர்ந்து 25 ஆண்டு காலம் நகர துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**நெல்லிக்குப்பம் நகர்மன்றத் துணைத் தலைவராக பொறுப்பு வகித்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

### மக்களிடையே மத உணர்வைத் தூண்டும் வகையிலும் - ஆதாரமில்லாமலும் பேசிய ஒன்றிய நிதி அமைச்சர்

# நிர்மலா சீத்தாராமன் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்திடுவீர்!

## தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அலுவலரிடம் ஆர்.எஸ்.பாரதி புகார்!

**சென்னை, மார்ச் 20-**

**தமிழ்நாடு தலைமை தேர்தல் அலுவலருக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கொடுத்துள்ள கடிதத்தில், "தேர்தல் நடத்தை விதிகளை மீறியும், ஆதாரமில்லாமலும் பேசியுள்ள இந்திய நிதித்துறை ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.**

ஆர்.எஸ்.பாரதி கொடுத்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

தி.மு.க. இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சியாகும். தற்பொழுது தமிழ்நாட்டின் ஆளும் கட்சியாகி, மக்கள் நல்வாழ்வைப் பேணிடும் ஆட்சியாக மக்களுக்குத் தொண்டாற்றிக்கொண்டிருக்கிறது. எங்களுடைய கட்சி தமிழ்நாட்டை ஆளுகின்ற போதெல்லாம் எல்லாத் துறைகளிலும் வியக்கத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்திக்காட்டியிருக்கிறோம்.

தொழிற்சாலைகள் செழிப்பாக பெருகிக் கொண்டிருக்கின்றன. கல்வியும் சுகாதார வசதிகளும் ஒவ்வொருவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடியவையாக ஆக்கப்பட்டுள்ளன. ஏழை எளியோர்க்கு கல்வியும், மருத்துவ வசதிகளும் கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கியமான பண்பாகிய சமயச்சார்பின்மைக் கொள்கைகளால் எப்போதும் உயர்த்திப்பிடிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தற்பொழுது தமிழ்நாடு வளர்ச்சிக்குறியீடுகள் பலவற்றில் முதலிடத்தில் இருக்கிறது.

பாரதிய ஜனதா கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எங்களுடைய கட்சியின் புகழுக்கும்,



எங்கள் தலைவரின் புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தி அவற்றைக் குறைத்திடும் வகையில், சட்டவிரோதமாக சொந்த இலாபம் அடைவதை நோக்கமாகக் கொண்டு, மக்கள் பிரதிநிதித்துவம் மற்றும் தேர்தல் நடத்தைச் சட்டம் 1951-இன் விதிகளை மீறும் வகையில் பொது வெளியிலும், பொது ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் பொய்யான பரப்புரை செய்து, மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தும் முறையிலும் நற்பெயரைச் சீர்குலைத்திடும் முறையிலும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்திய தேர்தல் ஆணையம் 2024-ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் பற்றிய அறிவிப்பை கடந்த 16.03.2024 பிற்பகல் 3.00 மணியளவில் வெளியிட்டது. ஆனால் 16.3.2024 அன்று பிற்பகல் மணி 5.30க்கு ஒன்றிய அரசின் நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீத்தாராமன் அவர்கள் 'சாணக்கியா' என்கிற யூடியூப் சேனல் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் பேசினார். சுமார் 500 பேர்கள் கலந்து கொண்ட அக்கூட்டத்தில் பேசும் போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது திருமதி. நிர்மலா சீத்தாராமன் உண்மைகளைச் சரிபார்த்துக் கொள்ளாமலும், உண்மைத் தகவல்களைத் திரித்தும் பேசியும் குறை கூறியுள்ளார்.

"நமது கோயிலையே அழிக்கக்கூடிய, நமது கோயிலையே சுரண்டித் தின்னக்கூடிய, நமது மதத்தையே அழிப்பேன் என்று சொல்லக்கூடிய கட்சிக்கெல்லாம் ஏன் ஓட்டு போடுறீங்க" - என்று திருமதி. நிர்மலா சீத்தாராமன் பேசியுள்ளார்.

தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடந்தை விதிகள் 3.00 மணி முதல் அமலுக்கு வந்த பிறகு மேற்குறிப்பிட்டவாறு அவர் பேசியுள்ளார். எங்கள் கட்சி ஒருபோதும் கோயில்களுக்கு எதிராகவோ, எந்த மதத்துக்கும் எதிராகவோ ஒருபோதும் செயல்பட்டது கிடையாது.

எந்தக் காலக் கட்டத்திலும் கோயில்களின் நலன்களுக்கு எதிராகச் செயல்பட்டதே இல்லை. உண்மையில், எங்களுடைய அரசாங்கம் தான் சுமார் ஆயிரம் கோடி மதிப்புள்ள கோயில் நிலங்களை சட்டவிரோத ஆக்கிரமிப்பு, சட்டவிரோதமாகக் கைப்பற்றுதல், சொந்தம் கொண்டாடுதல் ஆகியவற்றிலிருந்து மீட்டுள்ளது. தற்பொழுது கோயில்கள் எந்த வில்லங்கங்களும் இல்லாமல் இருக்கின்றன.

கடந்த இரண்டரையாண்டுகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கோயில்களுக்கு குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. எங்கள் கட்சி எந்தப் பாகுபாடுமின்றி எல்லா மதங்களின் முன்னேற்றத்துக்கும் ஒத்துழைப்பு நல்கி வருகின்றது. அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டவாறு சமயச்சார்பின்மை பின்பற்றப்படுகிறது. எந்த மதத்துக்கும் எதிராக எந்தப் பாகுபாடும் காட்டப்பட வில்லை.

பல்வேறு மதங்களைப் பின்பற்றும் மக்கள் அனைவரும் தமிழ்நாட்டில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடையே சகோதரத்துவ உணர்வு செழித்து வளர்ந்துள்ளது. தமிழ்நாட்டு அரசாங்கம் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டு மக்களும், மற்ற உயர்நெறிகளுக்கிடையே சமயச்சார்பின்மையை மதித்துக் கடைப்பிடித்தும் வருகின்றனர்.

1951-ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 123, (3A)யின் படி தேர்தல் வெற்றிக்காக வெறுப்பைப் பரப்பும் பேச்சும், பிரிவு 125-இன் படி சமயம், இனம், சாதி, சமூகம், மொழி, பகையுணர்ச்சி, வெறுப்புணர்ச்சி ஆகியவற்றை இந்திய குடிமக்களிடையே பரப்புதலும் மூன்றாண்டுகள் வரை சிறைத்தண்டனைக்கும், அபராதத்துக்கும் உரிய குற்றங்களாகும்.

ஒன்றிய அமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமனின் மேற்குறிப்பிட்ட பொய்யான கூற்று, தேர்தல் நேரத்தில் ஒரு குறிப்பிட்ட மதத்தினரின் மதஉணர்வுகளைத் தூண்டிவிடும் நோக்கத்துடன் கூடியதாகும். 2024ஆம் ஆண்டு தேர்தல் நடந்தை விதிமுறைகள் பற்றிய அறிவுரைகள் (MCC Enforcement) தொடர் எண். 17,437/6/ INST/ECI/FUNCT/MCC/2024, நாள் 02.01.2014 தேர்தல் நடத்தை விதிமுறைகள் செயல்பாட்டில் உள்ள காலங்களில் செய்யக்கூடியன, செய்யக்கூடாதன பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

"திராவிட முன்னேற்றக்கழகம் கோயில்களை அழிக்கிறது, கோயில்களைச் சுரண்டித் தின்கிறது, மதத்தை அழிக்கிறது" என்றெல்லாம் பொய்களைக்கூறி இந்துக்களின் மத உணர்வுகளைத் தூண்டும் வகையில் அவர்களிடம் வேண்டுகோள் வைத்திருக்கிறார். இச்செயல் மூலமாக ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீத்தாராமன் தேர்தல் நடத்தை விதி (எண் 3)யை மீறியுள்ளார்.

ஆகவே குற்றச்சாட்டுகளை சரிபார்க்காமலும், வெறுப்பைத்தூண்டும் வகையிலும், தனது கட்சிக்கு தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காக மக்களின் மத உணர்வைத் தூண்டும் வகையில் பேசி தேர்தல் நடத்தை விதிகளை மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவுகள் 123 (3A) மற்றும் பிரிவு 125-இன் படி மீறிய குற்றத்துக்கு ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் ஆளாகியுள்ளார்.

ஆகவே மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, மற்றும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் ஆகியவற்றின்படி திருமதி. நிர்மலா சீத்தாராமன் மீதும், பாரதிய ஜனதா கட்சியின் மீது மேற்குறிப்பிட்ட விதிகள் மீறிய குற்றத்துக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களை நாங்கள் வேண்டிக்கொள்கிறோம்.

இவ்வாறு அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### நாடாளுமன்றத் தேர்தல்

# வேட்பு மனுத் தாக்கலின் போது - ஐவருக்கு மட்டுமே அனுமதி!

## சென்னைப் பெருநகர மாநகராட்சி ஆணையர் அறிவிப்பு!

*சென்னை,மார்ச்.20-*

வேட்புமனுத்தாக்கல் செய்யும் போது, தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்திலிருந்து 100 மீட்டருக்குள் 2 வாகனங்களுக்கும், வேட்பாளருடன் சேர்த்து 5 நபர்களுக்கும் மட்டுமே அனுமதி என மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 18ஆவது மக்களவைக்கான பொதுத்தேர்தல்2024 தமிழ்நாட்டில் வருகின்ற 19.04.2024 அன்று ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. அதனடிப்படையில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட வடசென்னை மக்களவைத் தொகுதி, தென்சென்னை மக்களவைத் தொகுதி மற்றும் மத்திய சென்னை மக்களவைத் தொகுதி ஆகிய மூன்று மக்களவைத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு வருகின்ற 19.04.2024 அன்று நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், தெரிவித்ததாவது :

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 3 மக்களவைத் தொகுதிகளுக்கான வேட்பு மனுக்களானது நாளை (20.03.2024) முதல் 27.03.2024 வரை (அரசு விடுமுறை நாட்கள் தவிர) ஆகிய நாட்களில் காலை 11.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை தேர்தல் நடத்தும் அலுவலர்களால் கீழ்க்கண்ட அலுவலகங்களில் வேட்புமனுக்கள் பெறப்படும்.

நாடாளுமன்றத் தொகுதிகள், முகவரி, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் விவரங்கள் வருமாறு:

எண்.02. சென்னை வடக்கு பாராளுமன்றத் தொகுதி

தேர்தல் நடத்தும் அலுவலர்/வடக்கு வட்டார துணை ஆணையாளர் அலுவலகம்,

பெருநகர சென்னை மாநகராட்சி,

எண்.62, பேசின்பிரிட்ஜ் சாலை,

பழைய வண்ணாரப் பேட்டை, சென்னை21.

கட்டா ரவி தேஜா,

தேர்தல் நடத்தும் அலுவலர்/ வட்டார துணை ஆணையாளர் (வடக்கு)

முதன்மை உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/ வடக்கு வட்டார துணை ஆணையாளர் அலுவலகம்,

பெருநகர சென்னை மாநகராட்சி,

எண்.62, பேசின்பிரிட்ஜ் சாலை,

பழைய வண்ணாரப் பேட்டை, சென்னை21.

எஸ். தனலிங்கம்,

உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் / பொது மேலாளர், TANSIDCO

எண்.03. சென்னை தெற்கு பாராளுமன்றத் தொகுதி

தேர்தல் நடத்தும் அலுவலர்/தெற்கு வட்டார துணை ஆணையாளர் அலுவலகம்,

பெருநகர சென்னை மாநகராட்சி,

எண்.115, டாக்டர் முத்துலட்சுமி சாலை, அடையாறு, சென்னை20

எம். பி. அமித்,

தேர்தல் நடத்தும் அலுவலர்/ வட்டார துணை ஆணையாளர் (தெற்கு)

முதன்மை உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/ வடக்கு வட்டார துணை ஆணையாளர் அலுவலகம்,

பெருநகர சென்னை மாநகராட்சி,

எண்.115, டாக்டர் முத்துலட்சுமி சாலை, அடையாறு, சென்னை20

பி. எம். செந்தில் குமார்,

உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/பொது மேலாளர் (பொது) தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

எண்.04. சென்னை மத்திய பாராளுமன்றத் தொகுதி

தேர்தல் நடத்தும் அலுவலர்/மத்திய வட்டார துணை ஆணையாளர் (அலுவலகம்),

பெருநகர சென்னை மாநகராட்சி,

எண்.36பி, புல்லா அவென்யூ, செனாய் நகர், சென்னை30

கே.ஜெ. பிரவீன் குமார்,

தேர்தல் நடத்தும் அலுவலர்/ வட்டார துணை ஆணையாளர் (மத்தியம்)

முதன்மை உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/மத்திய வட்டார துணை ஆணையாளர் (அலுவலகம்),

பெருநகர சென்னை மாநகராட்சி,

எண்.36பி, புல்லா அவென்யூ, செனாய் நகர், சென்னை30

திருமதி கவிதா,

உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/பொது மேலாளர் (பொது), தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

வேட்புமனுத்தாக்கல் தொடக்கம் : 20.03. 2024, வேட்புமனுத்தாக்கல் கடைசி நாள்:27.03.2024, 3. வேட்புமனு பரிசீலனை: 28.03.2024, 4. வேட்புமனு திரும்பப் பெற கடைசி நாள் : 30.03.2024, 5 தேர்தல் நாள்: 19.04.2024, 6. வாக்கு எண்ணிக்கை நாள்: 04.06.2024


மேலும், வேட்புமனுக்களானது மேற்கண்ட நாட்களில் காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை மட்டுமே பெறப்படும். வேட்புமனுத்தாக்கல் செய்யும் நிகழ்வின் போது, தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்திலிருந்து 100 மீட்டருக்குள் 2 வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும். வேட்புமனுத்தாக்கலின் போது, தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்திற்குள் வேட்பாளருடன் சேர்த்து 5 நபர்கள் மட்டுமே வேட்புமனு செய்ய அனுமதிக்கப்படுவர். வேட்புமனுத்தாக்கல் நடைபெறும் நாட்களில் மாலை 3.00 மணிக்கு மேல் தேர்தல் நடத்தும் அலுவலக வளாகத்தில் ஒருவருக்கும் அனுமதியில்லை எனத் தெரிவித்தார்.

---

### நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



நாடாளுமன்ற தேர்தலை சிறப்பான முறையில் எதிர்கொள்வதற்காக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (21.3.2024 வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், மௌலிவாக்கம் - மாங்காடு பட்டூர் சாலையில் அமைந்துள்ள சக்தி பேலஸ் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள், இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட கழக பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் - மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : வருகிற 19.04.2024 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை சிறப்பான முறையில் மேற்கொள்வது குறித்து. மற்றும் கழக வளர்ச்சி பணிகள்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**

செயலாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

---

# "மூழ்கும் கப்பல் பா.ஜ.க. கூட்டணியில் ஏறிய பா.ம.க."!

## செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. விமர்சனம்!

*சென்னை,மார்ச்.20-*

மூழ்கும் (பாஜக) கப்பலில் ஏறியுள்ளது பாமக. அதுவும் சேர்ந்து மூழ்க போகிறது என தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் செல்வப் பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "பாஜகவினர் ஏறக்குறைய ரூ.7,000 கோடியை தேர்தல் பத்திரத்தின் மூலம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பெற்றது பிச்சையா? நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தமிழக மக்களை பார்த்து கேட்கிறாரே அது பிச்சையா? இதற்கு நிர்மலா சீதாராமன் பதில் சொல்ல வேண்டும். தமிழக மக்களைப் பார்த்து பிச்சைக்காரர்கள் என நிதியமைச்சர் பேசுவார். இதையெல்லாம் அண்ணாமலை தட்டிக் கேட்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார். அண்ணாமலை எட்டப்பன் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார். இதனை காங்கிரஸ் வன்மையாக கண்டிக்கிறது.

பிரதமர் மோடி சர்வாதிகார ஆட்சி, கொடுங்கோல் ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறார். தேர்தல் பத்திரம் பற்றி பிரதமர் மோடி வாய்திறக்க வேண்டும். இந்திய மக்கள் கேள்விபடாத நவீன விஞ்ஞான ஊழலை மோடி செய்திருக்கிறார். பாஜக ஆட்சியின் முகத்திரை தினம் தினம் கிழிந்துகொண்டு இருக்கிறது.

இரண்டு, மூன்று நாட்களில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் வெளிவரும். தமிழ்நாட்டில் தமிழிசை போட்டியிட்டால் நோட்டாவை விட குறைவான வாக்குகள் பெறும் சூழல் ஏற்படலாம். மூழ்கும் (பாஜக) கப்பலில் பாமக ஏறியுள்ளது. அதுவும் சேர்ந்து மூழ்க போகிறது. காங்கிரஸ்தான் அனைவருக்குமான இயக்கம். சமூக நீதிக்கான கட்சி, அனைவரையும் தூக்கி பிடிக்கின்ற கட்சி.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இண்டியா கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவாக ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன் கார்கே சூறாவளி பிரச்சாரம் செய்ய இருக்கிறார்கள். ஓரிரு நாட்களில் தேதிகள் வெளியிடப்படும். நாங்கள் மக்களை நம்பி தேர்தலில் நிற்கிறோம். அவர்கள் இயந்திரங்களை நம்பி தேர்தலில் நிற்கிறார்கள். மக்கள் சரியான தீர்ப்பை வழங்குவார்கள்" என்றார் செல்வப்பெருந்தகை.

---

### ஜெ.கருணாநிதி - கே.ஏழுமலை பங்கேற்பு!

# 131 வது வட்ட நிர்வாகிகள் - பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மு.ம. செந்தில்குமார் வேண்டுகோள்!

*சென்னை,மார்ச்.20-*

131வது வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை. எம்.சி கலந்துகொள்கிறார்கள் என வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை.த.வேலு. எம்.எல்.ஏ அவர்களின் ஆலோசனைபடி தியாகராயர்நகர் கிழக்கு பகுதி 131வது வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் 20.03.2024 புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு கிளைக்கழக அலுவலகம் கலைஞர் பொதுநல மன்றத்தில் வட்ட அவைதலைவர் வை.தமிழ்ச்செல்வன் ஆகியோரின் தலைமையில் 131வது வட்ட கழக பாக ஒருங்கிணைப்பாளர் பகுதி அவைதலைவர் மு.மணிவண்ணன் மற்றும் பகுதி பொருளாளர் ஜி.மோகன்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தியாகராயர்நகர் சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ.கருணாநிதி. எம்.எல்.ஏ தியாகராயர்நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை. எம்.சி ஆகியோரும் கலந்துகொண்டு தென் சென்னை நாடாளுமன்ற தேர்தல் 2024 குறித்து ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

ஆகையால் வட்ட கழக நிர்வாகிகள் பாகம் முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. தென்சென்னை நாடாளுமன்ற தேர்தல் 2024

2. கழக ஆக்கப்பணிகள்.


இவ்வாறு மு.ம. செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

---

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

# சட்டமன்றத் தொகுதி வாரியாக நாடாளுமன்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



2024 காஞ்சிபுரம் நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி கட்சியின் சார்பில் போட்டியிடும் நாடாளுமன்ற வேட்பாளர் கழக வெற்றி வேட்பாளர் அவர்களை அறிமுகப்படுத்தி சட்டமன்ற தொகுதி வாரியாக இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் செயல் வீரர்கள் கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப் படி நடைபெற உள்ளது.

| தேதி | சட்டமன்ற தொகுதி | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 22.03.2024 காலை 9.00 மணி | காஞ்சிபுரம் | நாகேஷ் மகால் செவிலிமேடு, காஞ்சிபுரம் |
| 22.03.2024 பிற்பகல் 2.00 மணி | உத்திரமேரூர் | அழகர் மகால், ஆற்பாக்கம் |
| 23.03.2024 காலை 9.00 மணி | மதுராந்தகம் | கண்ணதாசன், ஓட்டல் அருகில் பாக்கம். |
| 23.03.2024 பிற்பகல் 2.00 மணி | செய்யூர் | கே.எஸ்.மகால், செய்யூர். |

எனவே, சம்பந்தப்பட்ட தொகுதிக்கு உட்பட்ட மாநகர - நகர - ஒன்றிய பேரூர் கழகச்செயலாளர்கள் ஒருங்கிணைந்து சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள் பெயரை முறையாக அழைப்பிதழ் அச்சிட்டு அவர்களிடம் வழங்கி கூட்டத்தில் பங்கேற்குமாறு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சமுக ஆர்வளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்திடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

# நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அவர்களின் அறிக்கை:

## 2024 நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதிகுட்பட்ட சட்டமன்ற தொகுதி வாரியாக தி.மு.கழக தேர்தல் பணிக்குழு

| | |
|---|---|
| மாண்புமிகு. **மரு.மா.மதிவேந்தன்**<br>வனத்துறை அமைச்சர் | **திரு.எஸ்.எம்.மதுரா செந்தில்**<br>நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர். |
| 095-பரமத்திவேலூர் தொகுதி பொறுப்பாளர்<br>**திரு.தமிழன் பிரசன்னா**<br>மாநில செய்தித்தொடர்பு இணை செயலாளர் | 096-திருச்செங்கோடு தொகுதி பொறுப்பாளர்<br>**திரு.வி.சி.சந்திரகுமார்**<br>மாநில கொள்கை பரப்பு இணை செயலாளர் |

### 95-பரமத்திவேலூர் சட்ட மன்ற தொகுதி

| | | |
|---|---|---|
| மாவட்ட நிர்வாகிகள் | V.G.அன்பழகன் | மாவட்ட துணை செயலாளர் |
| | M.சாந்தி | மாவட்ட துணை செயலாளர் |
| | T.ரங்கசாமி | தலைமை செயற்குழு உறுப்பினர் |
| | P.P.சாமிநாதன் | பொதுக்குழு உறுப்பினர் |
| | P.சிவக்குமார் | பொதுக்குழு உறுப்பினர் |
| திரு.கே.கே.சண்முகம், கபிலர்மலை ஒன்றிய கழக செயலாளர் | R.சுரேஷ் குமார் | முன்னாள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் |
| | மா.சுப்ரமணியம் | மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் |
| | T.M.சரவணகுமார் | மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் |
| | P.அருண் | மாவட்ட பொறியாளர் அணி தலைவர் |
| | P.சண்முகம் | கிளை கழக செயலாளர் |
| திரு.பி.பி.தனராசு, பரமத்தி ஒன்றியம் | துரைசாமி | ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் |
| | சி.மணிவண்ணன் | மாவட்ட பிரதிநிதி |
| | தியாகராஜன் | முன்னாள் ஊராட்சி செயலாளர் |
| | சேகர் | ஒன்றிய வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் |
| | சத்தியராஜ் | ஒன்றிய மாணவர் அணி துணை அமைப்பாளர் |
| | P.S.கிரிசங்கர் | மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் |
| | கண்மணி | ஊராட்சி மன்ற தலைவர் |
| | சிவக்குமார் | ஒன்றிய துணை செயலாளர் |
| | கருமண்ணன் | ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் |
| | V.N.லலித்குமார் | மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் |
| | பிரபாகரன் | ஒன்றிய பொருளாளர் |
| | செல்வராஜ் | ஒன்றிய அவைத்தலைவர் |
| | பிரேமா | ஒன்றிய துணை செயலாளர் |
| | மகேஷ்வரன் | மாவட்ட பிரதிநிதி |
| திரு.எம்.தங்கவேல், எலச்சிபாளையம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் | ராஜசேகரன் | மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் |
| | M.செல்வம் | ஒன்றிய துணை செயலாளர் குழந்தைவேல், கிளை கழக செயலாளர் |
| | P.தங்கபிரகாசம் | கிளை கழக செயலாளர் |
| | R.வேலுசாமி | விவசாய அணி துணை அமைப்பாளர் |
| | K.கந்தசாமி | மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் |
| | M.ராமசாமி | மாவட்ட பிரதிநிதி |
| | K.அன்பழகன் | மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை தலைவர் |
| | S.தனசேகர் | மாவட்ட பிரதிநிதி |
| திரு.ஏ.பி.ஆர்.சண்முகம், மோகனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் | K.மயில்சாமி | முன்னாள் ஊராட்சி செயலாளர் |
| | S.K.பூபதி | மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் |
| | P.பொன்னுசாமி | மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் |
| | V.C.கோவிந்தராஜ் | மாவட்ட பிரதிநிதி |
| | C.ராஜாமணி | மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் |
| திரு.எம்.ரமேஷ்பாபு பரமத்தி பேரூர் கழக செயலாளர் | மணி | மாவட்ட பிரதிநிதி,பேரூராட்சி தலைவர் |
| | ரமேஷ் | பேரூராட்சி உறுப்பினர் |
| | ரமேஷ் | பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் |
| | நாச்சிமுத்து | வார்டு செயலாளர் |
| | ஜெயவேல் | வார்டு செயலாளர் |
| | முருகேசன் | வார்டு செயலாளர் |
| | மணி | வார்டு செயலாளர் |
| | பாலசுப்ரமணியன் | முன்னாள் ஒன்றிய பிரதிநிதி |

### 96-திருச்செங்கோடு சட்ட மன்ற தொகுதி

| | | |
|---|---|---|
| மாவட்ட நிர்வாகிகள் | R.நடேசன் | தலைமை செயற்குழு உறுப்பினர் |
| | K.மயில்சாமி | மாவட்ட துணை செயலாளர் |
| | திருநாவுக்கரசு (எ) S.R.பழனியப்பன | பொதுக்குழு உறுப்பினர் |
| | M.இந்திராணி | பொதுக்குழு உறுப்பினர் |
| திரு.ஜி.தங்கவேல், திருச்செங்கோடு ஒன்றிய கழக செயலாளர் | R.ராஜா (எ) மோகன்ராஜ் | மாவட்ட பிரதிநிதி |
| | P.முருகையன் | மாவட்ட விவசாய அணி தலைவர் |
| | P.ராஜவேலு | மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் |
| | A.S.மணியம் | மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் |
| | சுரேஷ் | ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் |
| | P.குமரேசன் | மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் |
| திரு.கு.பழனிவேல் மல்லசமுத்திரம் ஒன்றிய கழக செயலாளர் | R.லோகநாதன் | மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் |
| | M.செல்வராஜ் | முன்னாள் மாவட்ட துணை செயலாளர் |
| | M.S.சுப்ரமணியம் | மாவட்ட பிரதிநிதி |
| | K.பாலசுப்ரமணி | மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் |
| | U.சுந்தரம் | ஒன்றிய அவைத்தலைவர் |
| | R.கணேசன் | மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் |
| திரு.கே.செல்வராசு எலச்சிபாளையம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் | R.சக்திவேல் | மாவட்ட விவசாய அணி துணை தலைவர் |
| | S.ரமேஷ் | மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் |
| | S.குணசேகரன் | மாவட்ட பிரதிநிதி |
| | P.செல்வம் | மாவட்ட பிரதிநிதி |
| | R.ஈஸ்வரன் | கிளை கழக செயலாளர் |
| திரு.டி.கார்த்திகேயன் திருச்செங்கோடு நகர கழக செயலாளர் | T.சுரேஷ் பாபு | மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் |
| | T.N.ரமேஷ், | மாவட்ட பிரதிநிதி |
| | வார்டு எண் :2,3,4,5,6,11,12,13,14,15,16,25,26,27,32,33 | |
| | S.V.இராஜேந்திரன் | வார்டு செயலாளர் |
| | K.மாதேஸ்வரன் | மாவட்ட வர்த்தகர் அணி தலைவர் |
| | வார்டு எண் : 1,7,8,9,10,17,18,19,20,21,22,23,24,28,29,30,31 | |
| திரு.மு.திருமலை மல்லசமுத்திரம் பேரூர் கழக செயலாளர் | R.வடிவேல் | பேரூர் அவை தலைவர் |
| | A.சேகர் | வார்டு செயலாளர் |
| | R.செல்வன் | மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் |
| | V.M.முருகேசன் | வார்டு செயலாளர் |
| | G.ஈஸ்வரமூர்த்தி | முன்னாள் வார்டு செயலாளர் |

### பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி தொடர்ச்சி..,

| | | |
|---|---|---|
| திரு.ஆர்.கருணாநிதி பொத்தனூர் பேரூர் கழக செயலாளர் | ரா.அன்பரசு | பேரூராட்சி துணை தலைவர் |
| | குச.அசோக் | பேரூர் அவைத்தலைவர் |
| | உ.சங்கர் | வார்டு கவுன்சிலர் |
| | T.P.செல்வராஜ் | வார்டு திரு செயலாளர் |
| | T.P.அன்பழகன் | ஒன்றிய பிரதிநிதி |
| திரு.பி.முருகவேல் பாண்டமங்கலம் பேரூர் கழக செயலாளர் | S.மணிகண்டன் | வார்டு பிரதிநிதி |
| | ஞா.அருண்குமார் | மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் |
| | P.சந்தோஷ் | வார்டு துணை செயலாளர் |
| | ரா.சீனிவாசன் | மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் |
| | S.சிங்காரம் | வார்டு துணை செயலாளர் |
| | G.மாரியப்பன் | ஒன்றிய பிரதிநிதி |
| திரு.பி.முருகன் வேலூர் பேரூர் கழக செயலாளர் | A.R.தனகரன் | மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் |
| | B.முரளி (எ) மூர்த்தி | மாவட்ட நெசவாளர் அணி தலைவர் |
| | M.ராஜா | பேரூராட்சி துணை தலைவர் |
| | V.சுரேஷ் | வார்டு பிரதிநிதி |
| | D.உதயகுமார் | மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் |
| | S.செல்வம் | முன்னாள் மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் |
| திரு.எம்.ராமலிங்கம் வெங்கரை பேரூர் கழக செயலாளர் | தனபால் | வார்டு செயலாளர் |
| | அருள் | பேரூர் துணை செயலாளர் |
| | M.பழனிசாமி | மாவட்ட பிரதிநிதி |
| | மோகன் | வார்டு துணை செயலாளர் |
| | P.செந்தில்குமார் | பேரூர் பொருளாளர் |
| | S.சக்திவேல் | மாவட்ட பிரதிநிதி |
| | சோமசுந்தரம் | வார்டு செயலாளர் |

# நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.

குழந்தைத் தொழிலாளர் சட்டம் மற்றும் சட்டப்பிரிவுகளுக்கு முரணாக – பிரதமர் வருகையின் போது வரவேற்பளிக்க

# பள்ளிக் குழந்தைகளை நிற்க வைத்த பா.ஜ.க. வினர் மீது நடவடிக்கை எடுத்திடுவீர்!

## தமிழ்நாடு தலைமை தேர்தல் அலுவலரிடம் ஆர்.எஸ்.பாரதி புகார்!

**சென்னை, மார்ச் 20– தமிழ்நாடு தலைமை தேர்தல் அலுவலரிடம் வழங்கிய மனுவில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, "கோவையில் பிரதமர் மோடி பங்கேற்ற பிரச்சாரத்தின் போது பள்ளிக் குழந்தைகளை நிற்க வைத்த வரவேற்பளித்த பா.ஜ.க.வினர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

அம்மனு வருமாறு:-

கடந்த 18.3.2024 இல் மாண்புமிகு பிரதமர் அவர்கள், கோயம்புத்தூருக்கு தேர்தல் பரப்புரைக்காக வந்திருந்தார். அந்தத் தேர்தல் பரப்புரைப் பணிக்கு ''பிரதமரின் ரோடுஷோ'' எனத் தலைப்பிடப்பட்டது. அந்த நேரத்தில் பாரதிய ஜனதா கட்சியினர் சிறுவர், சிறுமிகளை தேர்தல் வேலைகளிலும், தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தினர்.

தேர்தல் வேலைகளில் 12 முதல், 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளை பாரதிய ஜனதா கட்சியினர் ஈடுபடுத்தினர். மேலும் அவர்கள் பாரதிய ஜனதா கட்சியின் சின்னங்கொண்ட உடைகள் உடுத்தவும், இசை முழக்கத்துக்கேற்ப பாடல்கள் பாடவும், கவிதைகளை ஒப்புவிக்கவும் செய்யப்பட்டனர்.

மேலும் குழந்தைகளை காவிநிற உடைகள் அணியச் செய்து நெடுஞ் சாலையில், கைகளில் பாரதிய ஜனதா கட்சியின் கொடிகளைப் பிடித்துக்கொண்டு பிரதமரின், 'ரோடுஷோ' வின் போது நிற்கவைக்கப் பட்டிருந்தனர்.

பாரதிய ஜனதா கட்சியின் மேற்குறிப்பிட்ட செயல். இந்திய தேர்தல் ஆணையம் 05.02.2024 இல் வெளியிட்ட சுற்றறிக்கைக்கு நேரடியாக எதிராகவும் குழந்தைத் தொழிலாளர் மற்றும் பாதுகாப்புச் சட்டப்பிரிவுகளுக்கு முற்றிலும் மீறும் வகையிலானதாகும்.

தேர்தல் ஆணையத்தின் 05.2.2024 அறிக்கை பக்கம் 3, குறிப்பு 3 இல் தேர்தல் பணிகளில் அரசியல் கட்சிகள் எந்த வகையிலும் குழந்தைகளை ஈடுபடுத்தக் கூடாது என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர், தேர்தல் அலுவலர்கள் அனைவருக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் குழந்தைகளை எந்தவிதமான தேர்தல் பணிகளிலும் ஈடுபடுத்தினால் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கண்டிப்பாக அறிவுறுத்தியுள்ளார்.

பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் தொடர்பான பணிகளில் குழந்தைகளை ஈடுபடுத்தியுள்ளமையைக் காண்பிக்கும் வீடியோ கிராஃபை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன்.

ஆகவே இந்தப்பிரச்சினையை முழுமையாக ஆய்வு செய்து, பாரதிய ஜனதா கட்சியின் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்!, குழந்தைகளைக் காக்கவும், தேர்தல் தொடர்பான வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அம்மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தூத்துக்குடி அல்ல; எங்கே போட்டியிட்டாலும்

# தமிழிசை சௌந்தரராஜன் டெபாசிட் வாங்க போராட வேண்டும்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை மார்ச் 20- தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் விறுவிறுப்பாக அரசியல் கட்சியில் செய்து வருகின்றனர் . இந்த நிலையில் காங்கிரஸ் சார்பில் சிவகங்கை நாடாளுமன்ற தொகுதிக்கு மீண்டும் தற்போதைய எம்பி ஆக உள்ள கார்த்திக் சிதம்பரம் போட்டியிட வாய்ப்பு அதிகம் உள்ளது.

இந்த நிலையில் புதுக் கோட்டையில் சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்திக் சிதம்பரம் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதியை அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றதோடு தேர்தல் தொடர்பாக ஆலோசனை நடத்தினார். இதன் பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் கார்த்திக் சிதம்பரம் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில், தமிழிசை சௌந்தரராஜன் தூத்துக்குடி அல்ல எங்கே போட்டியிட்டாலும் டெபாசிட் வாங்க போராட வேண்டி இருக்கும்,

ஆளுநர் ஆர்.என். ரவி தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு பீகாரில் நிதீஷ் குமாருக்கு போட்டியாக தேர்தலில் போட்டியிட போவதாகவும் தகவல் வந்துள்ளது,

அந்த செய்தி உண்மையாக வரும் பட்சத்தில் நல்ல மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும். நாங்கள் முன்னாள் ஜெயலலிதாவை அரசியல் ரீதியாக தான் விமர்சனம் செய்துள்ளோமே தவிர, தனிப்பட்ட முறையில் நாங்கள் விமர்சனம் செய்து இழிவு படுத்தவில்லை, ஜெயலலிதாவை யார் இழிவுபடுத்தினார்கள் என்பது அவர்களுக்கு தெரியும், வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் இரண்டாவது இடத்திற்காக பாஜக, அதிமுக என யார் வேண்டுமானாலும் போட்டி போட்டுக் கொள்ளட்டும். ஆனால் இரண்டாவது இடத்தில் ஒரு திராவிட கட்சி வந்தால் நல்லது என்று நாங்கள் நினைக்கிறோம்,

அதிமுகவின் நிலையை தற்போது காணும்போது பரிதாபமாக உள்ளது,

பிரதமர் மோடி தமிழகத்திற்கு வருவதால் எங்களுக்கு தூக்கம் நிம்மதியாக வருகிறது. நாங்கள் தூக்கத்தை இழந்து தவிக்கவில்லை

யாரைக் கண்டும் பயப்பட வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது.

அவர் தான் தூக்கத்தை இழந்து தவித்து தமிழகத்திற்கு அடிக்கடி வந்து கொண்டுள்ளார். எத்தனை முறை பிரதமர் மோடி தமிழகத்திற்கு வந்தாலும் தாமரைக்கு தமிழகத்தில் வேலை இல்லை. தமிழகத்தில் உள்ள 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள் என்பது உறுதி. நாங்கள் யாரும் ஜெயலலிதாவை இழிவு படுத்தவில்லை. அவர் என்னென்ன இழிவு படுத்தினார் என்பதை பிரதமர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அரசியல் ரீதியாக யாரை எதிர்க்க வேண்டுமோ அவர்களை நாங்கள் எதிர்த்து கொண்டு தான் உள்ளோம். கட்சி ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் தான் நாங்கள் அவரை எதிர்த்தோம்

சிஏஏ சட்டம் நிறைவேறுவதற்கு காரணம் அதிமுக தான். அதை கொண்டு வருவதற்கு காரணமும் அதிமுக தான். மகளிர் உரிமை திட்டம் தொடர்பாக அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் குஷ்பூ ஆகியோர் தெரிவித்த கருத்துக்களால் பெண்கள் கொதித்து எழுந்துள்ளனர். தேர்தலில் பாஜகவுக்கு எதிராக வாக்குகளை அளித்து சரியான பதிலடி கொடுப்பார்கள்.

இந்த நிலைமை வரை திமுக பாஜக இடையே தான் போட்டி என்ற நிலை இல்லை. எங்களுடைய கூட்டணி வளமான கூட்டணியாக இருக்கும் என்று எடப்பாடி சவால் விட்டார். ஆனால் இன்று கூட்டணிக்கு ஆள் கிடைக்காமல் வேலுமணியும் தங்கமணியும் திண்டாடி வருகின்றனர். அப்போது இருந்த அதிமுக வேற, இப்போது உள்ள அதிமுக வேற, இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கார்த்திக் சிதம்பரம்

பாஜக வாரிசு அரசியல், வாரிசு அரசியல் என்று எங்களை கூறிவிட்டு தற்போது மேடையில் பிரதமர் மோடியுடன் வாரிசு அரசியல் காரராக தான் இருந்தனர். அவர்களோடு சேர்ந்தால் புனிதர்கள் . அவர்களை எதிர்த்தால் ஊழல்வாதிகள் என்று பாஜகவினர் கூறி வருகின்றனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – கோ.வி.லெனின் கருத்துரை!

# சைதை மேற்கு வட்டச் செயலாளர் - பாகத் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 20- சைதை மேற்கில் வட்ட கழகச்செயலாளர்கள்-பாகத்தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற உள்ளது எனவும் சம்பந்தப்பட்ட கழகத்தினர் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் எனவும் பகுதிச்செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு:-

நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் வட்டகழகச்செயலாளர்கள்-பாகத்தலைவர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ஏற்பாட்டில் 20.03.2024 (புதன்கிழமை) மாலை 5.00 மணியளவில் சைதாப்பேட்டை கொத்தவால்சாவடி தெருவில் உள்ள பி.எஸ்.டி. திருமண மண்டபத்தில் பகுதி அவைத்தலைவர் களக்காடிஎல்லப்பன் தலைமையிலும் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா. அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., முன்னிலையில் பகுதிகழகநிர்வாகிகள் த.சம்பத், ஆர். ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வரவேற்பில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழகசெயலாளர் -அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொகுதி மேற்பார்வையாளர் கோ.வி.லெனின் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்பிக்க உள்ளனர்.

எனவே வட்டகழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிஅமைப்பாளர்கள், பாகத்தலைவர்கள், பாகஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் குறிப்பிட்ட நேரத்திற்குள் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு சைதை மேற்கு பகுதி கழகசெயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்டம், வட சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட

## கொளத்தூர், திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர்– அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம், வட சென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட கொளத்தூர் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிகளின் பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (20/03/2024 புதன்கிழமை) காலை 9.30 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண்.7.செல்லப்பா தெரு என்ற விலாசத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மேற்கண்ட தொகுதிகளுக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள்,பகுதிக் கழகச் செயலாளர்கள்.. பொதுக்குழு உறுப்பினர்கள் ,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நாடாளுமன்ற தேர்தல் பணிகள்

அமைச்சர் **பி.கே.சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

சென்னை கிழக்கு மாவட்டம்

# திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தேர்தல் 2024

மாவட்டச் செயலாளர்–அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி – வடக்கு, தெற்கு, கிழக்கு பகுதிகளில் வட்ட வாரியாக, நடைபெறும் வட்டக்கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டங்களின் விவரம்:–

**பங்கேற்று சிறப்பிப்பவர்: கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.,**

### அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர்- ஜோசப் சாமுவேல், எம்.எல்.ஏ.

| தேதி | நாள் மற்றும் நேரம் | வார்டு | இடங்கள் | வட்ட செயலாளர் |
|---|---|---|---|---|
| 20.03.2024 | புதன்கிழமை மாலை 5.00 மணி | வார்டு 86 | ஸ்ரீலட்சுமி மஹால் அம்பத்தூர், சென்னை–53 | எம்.கமல் |
| 21.03.2024 | வியாழக்கிழமை மாலை 4.30 மணி | வார்டு 85 | பி.எஸ்.வி.மஹால் சி.டி.எச்.ரோடு | த. கண்ணபிரான் |
| 21.03.2024 | வியாழக்கிழமை மாலை 5.30 மணி | வார்டு 81 | பென்சன் பார்ட்டி ஹால், ஓரகடம் ரோடு | மு. இரகு |
| 22.03.2024 | வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி | வார்டு 79, 79அ | மஹாலட்சுமி திருமண மண்டபம், ராக்கி திரையரங்கம் அருகில் | வெ.ரவீந்திரன் மற்றும் பு.வீரா |
| 22.03.2024 | வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி | வார்டு 80 | EJB மஹால் புதூர், அம்பத்தூர் | இராதாகிருஷ்ணன் |

### அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர்- டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.சி.

| தேதி | நாள் மற்றும் நேரம் | வார்டு | இடங்கள் | வட்ட செயலாளர் |
|---|---|---|---|---|
| 21.03.2024 | வியாழக்கிழமை மாலை 6 மணி | வார்டு 93 | எ.எஸ்.என்.சொர்ண மகால், நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலை, கோல்டன் ஜார்ஜ் நகர் | ஆர்.டீக்கா |
| 21.03.2024 | வியாழக்கிழமை மாலை 7 மணி | வார்டு 90 | S.A.S.திருமண மண்டபம் திருவள்ளீஸ்வரர் நகர் | நா.நெப்போலியன் |
| 22.03.2024 | வெள்ளிக்கிழமை மாலை 5 மணி | வார்டு 87 | மீராஹால் மகாத்மா காந்தி சாலை, பாடி. | பிரகாஷ்குமார் |
| 22.03.2024 | வெள்ளிக்கிழமை மாலை 6 மணி | வார்டு 88 | டி.எஸ்.பி.மஹால் SBOA பள்ளி சாலை அண்ணாநகர் மேற்கு | சீ.சினிவாசன் |
| 22.03.2024 | வெள்ளிக்கிழமை மாலை 7 மணி | வார்டு 89 | அஸ்வின் மஹால் இளங்கோநகர், பாடி | எம்.இ.சேகர், எம்.சி. |

### அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் - எம்.டி.ஆர்.நாகராஜ்,

| தேதி | நாள் மற்றும் நேரம் | வார்டு | இடங்கள் | வட்ட செயலாளர் |
|---|---|---|---|---|
| 20.03.2024 | புதன்கிழமை மாலை 6.00 மணி | வார்டு 84, 84அ | எச்.ஆர்.விஜயா மஹால் ஸ்டேசன் ரோடு கொரட்டூர் | மு. விஜயகுமார் த.வ.லால் |
| 22.03.2024 | வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி | வார்டு 83, 83 அ | கே.டி.என், பார்ட்டி ஹால் ஸ்டேசன் ரோடு கொரட்டூர் | சீ.லோகநாதன் சு.மோகன்குமார் |
| 23.03.2024 | சனிக்கிழமை மாலை 7.00 மணி | வார்டு 82, 82அ | எஸ்.வி.மஹால் சர்வீஸ் ரோடு ஓம் சக்தி நகர் | மு.சண்முகம் அ.சுந்தர்ராஜ் |

இவ்வட்டங்களில் நடைபெறும் கூட்டங்களில் அப்பகுதிக்குட்பட்ட மாநில மாவட்ட, பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

# யு.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வு ஒத்திவைப்பு!

சென்னை,மார்ச்.20- மக்களவைத் தேர்தலையொட்டி யுபிஎஸ்சி முதல் நிலைத் தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக தேர்வாணையம் அறிவித்துள்ளது.

மக்களவைத் தேர்தலையொட்டி யுபிஎஸ்சி முதல் நிலைத் தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக தேர்வாணையம் அறிவித்துள்ளது.

மே 26 நடைபெறவிருந்த யு.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வு ஜுன் 16ம் தேதி நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐஏஎஸ், ஐபிஎஸ் உள்ளிட்ட குடிமை பணிகளுக்கான தேர்வுகளை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தி வருகிறது. அந்தவகையில் 2024ம் ஆண்டுக்கான முதல்நிலைத் தேர்வுகளை மே 26ம் தேதி நடத்த தேர்வாணையம் திட்டமிட்டிருந்தது.

இந்நிலையில், மக்களவைத் தேர்தல் காரணமாக யுபிஎஸ்சி முதல்நிலைத் தேர்வை ஜுன் 16ம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதி தொடங்கி ஜுன் 1 ஆம் தேதி வரை 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

# திருவாரூரில் சீரமைக்கப்பட்ட குளங்கள்!

திருவாரூர், மார்ச் 20 - திருவாரூர் நகர்ப்பகுதிகளில் உள்ள குளங்கள் 3.79 கோடியில் சீரமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வந்தன. மேலும் 43 லட்சத்து 57ஆயிரம் மதிப்பீட்டில் பூங்கா பணிகள் நடைபெற்று, அனைத்தும் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது .

மேலும் நகர்ப்பகுதியில் உள்ள சோமசுந்தரம்பூங்கா 41லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், பிடாரி அம்மன் கோவில் தெரு குளமானது ஒரு கோடியே 9 லட்சம் மதிப்பீட்டிலும், ஐ.பி. கோவில் குளம் ஒருகோடியே 23 லட்சம் மதிப்பீட்டிலும், வாசன்நகர்குளம்ரூபாய் 73 லட்சத்து 30ஆயிரம் மதிப்பீட்டிலும் ,கொடிக்கால் பாளையம் குளம் ரூபாய் 33 லட்சம் மதிப்பீட்டிலும், புதுதெரு குளம் ரூபாய் 41 லட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்கப்பட்டு நடைபாதையுடன் மக்கள் பாராட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

நகரப்பகுதிஏ.டி.பி.நகரில் பூங்காவானது 43 லட்சத்து 57ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு புதுப்பொலிவோடு மக்கள் பயன்பாட்டிற்கு வந்தது.

சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் பங்கேற்று பணிகள் முடிக்கப்பட்ட அனைத்தையும் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், எம்.இராமசந்திரன், து.செல்வம், ஒரத்தநாடு தொகுதி மேற்பார்வையாளர் அக்ரி கணேசன், தஞ்சை மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், மாநிலக் கழக நிர்வாகிகள் எஸ்.ஜித்து, அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், எல்.ஜி. அண்ணா. புண்ணியமூர்த்தி, கனகவள்ளி பாலாஜி, மாவட்ட ஊராட்சி தலைவர் உஷா புண்ணியமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# "தலைவர் நம் இதயசூரியன்"



மூவடியால் உலகம்
அளந்தது ஒரு காலம்
6000 ஏக்கர் நிலம்
கடவுளுக்கே மீட்டுத் தருவது
தலைவர் காலம்

குடமுழுக்கே இல்லாமல்
வறண்ட பத்தாண்டுகள்
ஒரு காலம்
இரண்டே ஆண்டில்
1000குடமுழுக்கு
தலைவர் காலம்

சாமி நகையெல்லாம்
மாமி நகையானது ஒரு காலம்
சாமி நகையைச் சாமிக்கே
மீட்டது தலைவர் காலம்

24மணிநேரம்
அர்ச்சகர்கள் மட்டும் தளிகை
சாப்பிட்டது ஒரு காலம்
24மணிநேரம் பக்தர்கள்
அன்னதானம் சாப்பிடுவது
தலைவர் காலம்

அதே தமிழ்தான்
அதே உயிரெழுத்து மெய்யெ
ழுத்து தான்
முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலின் என்று
சொல்லிப் பாருங்கள்
குருதிக்குள் நெருப்பு சேரும்
வார்த்தைக்குள் எரிமலை
சேரும்

நம் உதயசூரியன்
நம் இதயசூரியன்
தலைவரின் பிறந்தநாள்
மார்ச் ஒன்று
March forward
March forward
என தமிழ்நாடு
நம்பர் 1ஆக
இருக்க வைப்பார்
சாதனைத் தலைநகர் தமிழ்நாடு
என்று ஜெயிக்க வைப்பார்
கல்வியில் நம்பர் 1
கோயிலில் நம்பர் 1
சுகாதாரத்தில் நம்பர் 1
வேளாண்மையில் நம்பர் 1
செயற்கை நுண்ணறிவில் நம்பர் 1
தொழில் வளர்ச்சியில் நம்பர் 1
எனவே மார்ச் 1
தளபதி பிறந்த நாள்
தமிழ்நாடு சிறந்த நாள்

நம் தலைவர் வள்ளுவர்
எல்லோருக்கும் எல்லாம் எனப்
பொதுமறை செய்தார்

நம் தலைவர் கம்பர்
ஈரோடு ராமசாமியை
வணங்குவதால்

நம் தலைவர் இளங்கோஅடிகள்
ஈ.டி.க்கு அஞ்சாமல்
மோடிமஸ்தானிடம்
தமிழ்நாட்டுக்கான
நீதி கேட்பதால்

நம் தலைவர் கலியுக வள்ளல்
தாய்மாருக்கெல்லாம் அள்ளிக்
கொடுப்பதால்

மழை மாரி
தூறல் சாரல்
அடைமழை கனமழை
ஆலங்கட்டி மழை
ஆழிமழை பனிமழை
ஆயிரம் மழை பார்த்து
விட்டோம்
நம் தலைவர் மட்டும்தான்
கருணை மழை

வெள்ளத்தில் வீழ்ந்தோம்
வெள்ளத்தில் தத்தளித்தோம்
வெள்ளத்தில் பரிதவித்தோம்
வெள்ளத்தில் முடங்கினோம்
குலசாமியாய்க் களத்தில்
காத்தார் தலைவர்
கருணைத் தொகை
நம் கைகளில் சேர்த்தார்
தலைவர்

ஏழைத்தாயின் மகன் மோடி
மஸ்தான் சுருட்டியது 6000
கோடி ருபாய்

ஏழைத்தாயின் மகனாக நம்
தலைவர் தந்தது
6000ரூபாய்

காங்கேயம் காளை
உம்பளச்சேரி காளை
ஆலம்பாடி காளை
ஓங்கோல் காளை
பர்கூர் காளை
நாம் அறிவோம்
நம் தலைவர் சீறிப் பாயும்
திராவிடக் காளை
சுய மரியாதைதான்
அவரது திமில்
சமூக நீதிதான் கூரான கொம்பு
தலைவரின் திராவிட
மாடல் ஆட்சி
தமிழ்நாட்டின் ஏறு தழுவுதல்
காட்சி

கஜா புயல் ஒக்கி புயல் தானே
புயல் வர்தா புயல் லைலா புயல்
மிக்ஜாம் புயல்
எல்லாம் பார்த்தோம்
நம் தலைவர் மட்டும்தான்
செயல் புயல்

ஒக்கி புயல் எல்லாம் அழிக்கும்
தலைவர் புயலால் தமிழ்நாடு
செழிக்கும்

தலைவர் நடமாடும் சூரியன்
அவர் பேசினால் நடுங்குகிறான்
ஆரியன்

தலைவர் காற்று
ஆளுநரையே வெளிநடப்பு
செய்ய வைக்கும் புயல்காற்று

தலைவர் வானம்
நீங்கள் நலமா என்பதே
தலைவர் எண்ணம்

தலைவர் சமுத்திரம்
பசு மூத்திரம் குடிக்கும் சங்கிகள்
அவருக்கு எம்மாத்திரம்

தலைவர் பூகோளத்தை
மாற்றுகிறார்
சூரியன் உதிக்கும் திசை தெற்கு
என மாற்றுகிறார்

தலைவர் சரித்திரத்தை
மாற்றுகிறார்
கலைஞர் நூற்றாண்டு நூலகம்
கட்டுகிறார்
கலைஞர் உலகம் கட்டுகிறார்
காவிக்குச் சமாதியும் கட்டுகிறார்

முதல்வர் கையெழுத்திடுகிறார்
குடிசைகள் அடுக்கு
வீடுகளாகின்றன

முதல்வர் கையெழுத்திடுகிறார்
பூ விற்கும் புஷ்பாக்காவிடம்
சிரிப்பூ சேர்கிறது

முதல்வர் கையெழுத்திடுகிறார்
வீட்டு வேலை பார்க்கும்
அன்னபூரணிக்காவிடம்
சேமிப்பு சேர்கிறது

முதல்வர் கையெழுத்திடுகிறார்
சாமிகள் காப்பாற்றப் படுகின்றன

முதல்வர் கையெழுத்திடுகிறார்
மக்களைத் தேடி மருத்துவம்
வருகிறது

முதல்வர் கையெழுத்திடுகிறார்
மகளின் கைக்கரண்டி
கல்லூரிப் புத்தகமாகிறது

முதல்வர் கையெழுத்திடுகிறார்
தமிழ்ப் புதல்வன்
உருவாகிறான்
முதல்வர் கையெழுத்திடுகிறார்
பள்ளி மாணவன் பட்டினி
இரைப்பை
காலை உணவால் நிரம்புகிறது

முதல்வர் கையெழுத்திடுகிறார்
சமையலறைத்
தாய்ப் பறவைக்கு
விடியல் பயணம் முளைக்கிறது

முதல்வர் கையெழுத்திடுகிறார்
விவசாயிக்கு இலவச
மின் இணைப்பு வருகிறது

முதல்வர் கையெழுத்திடுகிறார்
எல்லாம் வருகிறது
ஆளத் தெரியாத ஒன்றியத்
தலைவருக்குப்
பொறாமை வருகிறது

ஏழைத்தாயின் சுருக்குப்
பையிலிருந்து எட்டணா
நாலணாவையும் சுருட்டுகிறார்
ஒன்றியத் தலைவர்

ஏழைத்தாயின் சுருக்குப்
பைக்குள் ஆயிரம் ரூபாய்
நிரப்புகிறார் நம் தலைவர்
ஏழைத் தாயை ஏடிஎம் வாசலில்
சுருண்டு விழ் வைத்தார்
ஒன்றியத் தலைவர்
ஆயிரம் ரூபாயை
அக்கவுண்ட்டில் சேர்த்து
மகிழ்ந்து
எழ வைக்கிறார் நம் தலைவர்

வரி போட்டு வரி போட்டுக்
கோடீஸ்வர நண்பருக்குக்
கவரி வீசுகிறார்
ஒன்றியத் தலைவர்

எளியவர் வாழ்க்கைக்குச்
சாமரம் வீசுகிறார் நம் தலைவர்

என் கடன்
பணி செய்து கிடப்பதே
என்பவர் நம் தலைவர்
என் பணி
கடன் செய்து கிடப்பதே
என்பவர் ஒன்றியத் தலைவர்
175லட்சம் கோடி கடன் வாங்கிய
ஊழல் பெருச்சாளி
மோடிமஸ்தான்

தேர்தல் பத்திரம்
ஊழல் செய்கிறார்
மோடிமஸ்தான்

தேசம் பத்திரம் எனக் காவல்
செய்கிறார் நம் தலைவர்

ஈ.டி.வைத்து மிரட்டுகிறார்
மோடிமஸ்தான்
ஈ.டி. வைத்து நல்லாட்சி
தருகிறார் நம் தலைவர்

ஈரோடு திராவிடன் என்னும் ஈ.டி.

பெரியார் மண்ணில்
சமூகநீதி ஆட்சி
தலைவரின் மாட்சி

இந்தியா கூட்டணி துவக்கம்
ஜனநாயகத்தின் முழக்கம்

நம் தலைவர் சர்வாதிகாரத்தை
வெல்லுவார்
திராவிட மாடல் ஆட்சியைத்
திக்கெட்டும் சொல்லுவார்

•



**ஆண்டாள் பிரியதர்ஷினி**
திமுக மக்கள் செய்தித் தொடர்பு
மாநிலத் துணைத் தலைவர்



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகர கழக மூத்த முன்னோடி மு.ராமன் (எ) ஒபிஆர். படத்திறப்பு நிகழ்வு நகரக் கழகச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் நடைபெற்றது. திருவுருவப்படத்தை முன்னாள் அமைச்சரும், மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. திறந்து வைத்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார். உடன் நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ், உள்பட பூவிருந்தவல்லி நகரக் கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் கவுன்சிலர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் பலர் உள்ளனர்.

### தூத்துக்குடி நாடாளுமன்றத் தேர்தல்:

## தூத்துக்குடி வடக்கு மாவட்ட 'இந்தியா' கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி,மார்ச்.20-

தூத்துக்குடி நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து : தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சட்ட மன்ற தொகுதிகள் வாரியாக 'இந்தியா' கூட்டணிக்கட்சி செயல்வீரர்கள் கூட்டம் குறித்து வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணிக்கட்சி வேட்பாளரின் வெற்றிக்கான பணிகள் குறித்து தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தூத்துக்குடி, விளாத்திகுளம், கோவில்பட்டி ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தொகுதி வாரியாக செயல்வீரர்கள் கூட்டங்கள் நடைபெற இருக்கிறது.

அதன்படி தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்கான செயல்வீரர்கள் கூட்டம் 21.03.2024 வியாழக்கிழமை காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி 2ம் கேட் அருகிலுள்ள அபிராமி மஹாலில் வைத்து நடைபெறுகிறது.

அதேபோல விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்கான செயல்வீரர்கள் கூட்டம் 21.03.2024 வியாழக்கிழமை மாலை 5.00 மணி அளவில் எட்டையபுரம் சாய்கணேஷ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

அதேபோல கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கான செயல்வீரர்கள் கூட்டம் 21.03.2024 வியாழக்கிழமை மாலை 6.30 மணி அளவில் கோவில்பட்டி, மந்தித்தோப்பு ரோட்டிலுள்ள சர்க்கஸ் மைதானத்தில் நடைபெறுகிறது.

அனைத்து செயல்வீரர்கள் கூட்டங்களுக்கும் மாவட்டச் செயலாளர் என்ற முறையில் பி.கீதாஜீவனாகிய நான் தலைமை தாங்குகிறேன். கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அ வ ர் க ள் சிறப்புரையாற்றுகிறார்.

கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் ஊர்வசி அமிர்தராஜ் எம்.எல்.ஏ., காங்கிரஸ் கமிட்டி துணை தலைவர் ஏ.பி.சி.வி.சண்முகம், தி.மு.க சார்பில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன், மாநகர மேயர் ஜெகன் பெரயசாமி, மாநகர செயலாளர் எஸ்.ஆர். ஆனந்தசேகரன், கோவில்பட்டி நகர செயலாளர் கா.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர் என். ராதாகிருஷ்ணன், மாவட்ட அவை தலைவர் ஜி.செல்வராஜ், மா.கம்யூ மாவட்ட செயலாளர் கே.பி. ஆறுமுகம், இ.கம்யூ மாவட்ட செயலாளர் பி.கரும்பன், ம.தி.மு.க மாவட்ட செயலாளர் ஆ ர் . எ ஸ் . ர மே ஷ் , வி.சி.க.மாவட்ட செயலாளர்கள், முருகன், கணேசன், இ.யூனியன், முஸ்லீம் லீக் மாவட்ட தலைவர் பி.மீராசா, மக்கள் நீதிமய்யம் மாவட்டச் செயலாளர் ஜவஹர், ரமேஷ், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் கயத்தாறு அஸ்மத், சமத்துவ மக்கள் கழகத்தின் மாவட்டச் செயலாளர் பி.எம்.அற்புதராஜ், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்டச் செயலாளர் என்.ஏ.கிதர்பிஸ்மி, ஆதித்தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் காயல் முருகேசன், ஆதித்தமிழர் கட்சி மாவட்டச் செயலாளர் நம்பிராஜ் பாண்டியன் மற்றும் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ள அமைப்புகளின் நிர்வாகிகள் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் சிறப்புரையாற்றுகின்றனர்.

எனவே அனைத்து செயல்வீரர்கள் கூட்டங்களிலும் அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட இந்தியா கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், செயல்வீரர்கள், பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறேன்.

### ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு

## 112, 112 'அ' வட்ட பி.எல்.ஏ. 2 / பி.எஸ்.சி. கூட்டம்!

### பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, மார்ச் 20-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் 112, 112 'அ' வட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு பி.எல்.ஏ.2 / பி.எல்.சி. கூட்டம் இன்று (20.03.2024 - புதன்கிழமை) மாலை 6 மணி அளவில் வரதராஜன்பேட்டை பிரதான சாலையில் நடைபெறுகிறது.

மு.க.தமிழரசு, விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக அமைப்பு இணை செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் அணி செயலாளர் நா.எழிலன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் இதில் கலந்து கொள்கின்றனர்.

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. நாடாளுமன்ற தேர்தல் குறித்து சிறப்புரையாற்றுகிறார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.டி.ஆர். நாதன், டி.ஜோஸ்டானியல், மாவட்டக் கழக நிர்வாகிகள் த.விக்டர், ஆர். என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜே.எஸ்.அகஸ்டின்பாபு, பகுதி கழக நிர்வாகிகள் அவைத் தலைவர் புவி.பாலாஜி, துணை செயலாளர்கள் என்.பி. இதயத் பாஷா, ஸ்டெர்லிங் மோகன், ரா.பொன்னம்மாள், பா.கமலக்கண்ணன்,

வட்ட செயலாளர் வரதை த.பரி, மு.மோகன், ச.டேவிட் இன்பராஜ், க.சிட்டிபாபு, த.குணசேகர், கே.எஸ்.தினேஷ், பிரபு,

மாவட்ட பிரதிநிதிகள் அ.குப்பன், எஸ். பார்த்திபன், த.ஐசென்ட், என்.இ.சரவணன், தட்சிணாமூர்த்தி, பா.சுரேஷ், எம்.டி.ஆர்.புகழ், ஆர்.சீனிவாசன், வி.என்.பாபு, பாகப் பொறுப்பாளர்கள் வழக்கறிஞர் கமலக்கண்ணன், எம்.ஏ.ஜஸ்டின், ஜி.வி.சரவணன், மோகன் பாண்டியன் மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழகத்தினுடைய நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை விடுத்துள்ளார்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் தி.மு.க. தலைமையிலான "இந்தியா" கூட்டணிக் கட்சிகளின்

## மாவட்டச் செயலாளர்கள் - தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்காக திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் தி.மு.க., தலைமையிலான "இந்தியா" கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (21.03.2024 வியாழக்கிழமை) காலை 10.00 மணியளவில் திருவள்ளூர் நகரம் ஜெ.என்.ரோட்டில் ஆயில் மில் அருகில் உள்ள ஐ.வி.ஆர்..திருமண மண்டபத்தில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. ஆகிய எனது தலைமையிலும் தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. இராஜேந்திரன் எம்.எல்.ஏ., வரவேற்பில் மற்றும் திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவரும், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினருமான துரை.சந்திரசேகர் எம்.எல்.ஏ., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கோபால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கஜேந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் தளபதி சுந்தர், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக மாவட்ட செயலாளர் மு.பாபு, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாவட்ட செயலாளர் ரத்துல்லா, மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் தணிகைவேல், மனித நேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் ஏ.பி.அஸ்காப் திராவிடர் கழக மாவட்ட செயலாளர் கோ.கிருஷ்ணமூர்த்தி தமிழக வாழ்வுரிமை கட்சியின் திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் கார்த்திக் தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் மாநில துணை பொது செயலாளர் புருசோத்தமன் ஆகியோர்களின் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் கே.திராவிடபக்தன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் ராஜாகுப்புசாமி, திருத்தணி தொகுதி பார்வையாளர் வடசென்னை நா.மனோகரன் கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். முடிவில் திருவள்ளூர் நகர செயலாளர். சி.சு.ரவிச்சந்திரன், நன்றி கூறுகிறார் எனவே, கூட்டணி கட்சிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் கட்சிகளின் செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 2024 அரக்கோணம் மற்றும் திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பணிகள் குறித்து

**திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



மதுரை நாடாளுமன்ற இந்தியா கூட்டணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சு.வெங்கடேசன் அறிமுக கூட்டம் மதுரையில் நடைபெற்றது. மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் பொன். முத்துராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஜெயராமன், கே.தனசெல்வம், மா.ஒச்சுபாலு, ஜெ.மூவேந்திரன், முருகவேல், சௌந்தரராஜன், பாக்கியநாதன், ஆர்.கணேசன், வைகை பரமன், பொறுப்பாளர்கள் திவாகரன், பாண்டியன், டாக்டர் சுந்தர்ராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கணேசன், துணை மேயர் நாகராஜன், விஜயராஜன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர் உள்ளனர்.

### மதுரை நாடாளுமன்றத் தொகுதி மார்க்சிஸ்ட்

# வேட்பாளர் சு.வெங்கடேசன் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

மதுரை, மார்ச் 20-

மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் இந்தியா கூட்டணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மதுரை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் சு.வெங்கடேசன் அறிமுக கூட்டம் மதுரை கோபால்சாமி திருமண மண்டபத்தில் நடைபெற்றதில் கீழ்க்கண்ட தீர்மானங்களை விளக்கி மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றினார், அதன் விபரம்:-

கடந்த இரண்டு ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இந்தியா கூட்டணி உருவாக்க இந்தியாவில் உள்ள பல்வேறு கொள்கை வேறுபாடு கொண்ட கட்சித் தலைவர்களையும், முதல்வர்களை யும் தமிழ்நாட்டிற்கு வரவழைத்து ஒவ்வொருவரின் மன வேறுபாடுகளையும் நீக்கி அவர்கள் அனைவரையும் தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளச் செய்து கவுரவப்படுத்தி இந்தியாவின் ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும் என்ற ஒற்றை இலட்சியத்துடன் இன்று இந்தியா கூட்டணி உருவாக்க தலைவர் கையாண்ட அரசியல் ராஜதந்திரம் முழு வெற்றி அடைந்து விட்டது.

இந்தியா முழுவதும் சென்ற நாடாளுமன்ற தேர்தலில் பிரிந்து நின்ற கட்சிகள் அனைத்தையும் ஒன்று கூட்டி ஒரு மாபெரும் வெற்றி கூட்டணியை உருவாக்கி விட்டனர். இது நம் தலைவருக்கு கிடைத்த மாபெரும் முதல் வெற்றி, அதற்காக நம் தலைவருக்கு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் முதல் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இந்திய ஒன்றிய அரசாங்கத்தை மிருக பலத்துடன் ஆளுகின்ற பாரதிய ஜனதா கட்சி தி.மு.க. கழகத்திற்கும் தமிழ்நாடு அரசுக்கும் பல்வேறு அதிகார அமைப்புகளின் மூலம் கொடுத்த அத்தனை மிரட்டல்களையும் நெருக்கடிகளையும் சமாளித்து இந்தியா கூட்டணியை உருவாக்கி இருப்பதும், நம் இந்தியா கூட்டணி இந்திய நாட்டின் ஆட்சிக்கட்டிலில் அமரும் நாள் விரைவில் உள்ளது என்பதையும் கடந்த 17.03.2024 அன்று மும்பையில் நடைபெற்ற இந்தியா கூட்டணி கூட்டத்தில் நம் தலைவர் உள்பட அனைத்து தலைவர்களும் உரையாற்றிய விதமும், அங்கு கூடிய மக்களின் ஆரவாரமும் உறுதி செய்து விட்டது.

இப்பொழுது நம் தலைவரின் எண்ணத்தை நிறைவேற்றும் பெரும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் இந்தியா கூட்டணி பெரும் வெற்றியை பெற இருக்கும் நிலையில் தமிழ்நாட்டில் இருந்து நாம் முழு பலத்துடன் அனைத்து வேட்பாளர்களையும் வெற்றி பெற செய்து நம் தலைவர் டெல்லிக்கு அழைத்துச் சென்றால்தான் நம் தலைவர் இவ்வளவு நாள் உழைத்ததற்கு பேரும் புகழும் அதற்கான அதிகார அங்கீகாரமும் தமிழ்நாட்டிற்கு கிடைக்கும்.

நம் தலைவருக்கு பெரும் புகழ் சேர்க்கவும், தமிழ்நாட்டிற்குரிய அதிகார அங்கீகாரத்தை பெற தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் நம் இந்தியா கூட்டணியை வெற்றி பெறச் செய்ய வேண்டும், அந்த வெற்றிக்கனியை பறிக்கும் முதலிடத்தில் நாம் மதுரை பாராளுமன்ற தொகுதி இருக்க வேண்டும். அதற்கான வெற்றி தேர்தல் களப்பணியை இன்றிலிருந்து மேலும் தீவிர படுத்த மதுரை மாநகர் மாவட்ட கழகம் இக்கூட்டத்தில் தீர்மானம் மூலம் அனைத்து நிர்வாகிகளையும், கழக உடன் பிறப்புகளையும், பொதுமக்களையும் கேட்டுக்கொள்கிறது.

இரண்டாவது தீர்மானமாக இந்தியா கூட்டணியை உருவாக்க நம் தலைவர் எடுக்கும் அனைத்து முயற்சி களுக்கும் தொடர்ந்து அகில இந்திய அளவில் உறுதியாக இருந்த இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, அக்கட்சி நிறுத்தியுள்ள மக்களின் நன்மதிப்பை பெற்ற வேட்பாளர் சு.வெங்கடேசன் அவர்களை பல லட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்து நம் தலைவரின் கைகளில் அந்த வெற்றிக் கனியை சமர்ப்பிக்க நாம் அனைவரும் தேர்தல் போர்க்களத்தில் துணிச்சல் மிக்க ஜனநாயகம் காக்கும் போராளிகளாக நின்று பணியாற்றி வெற்றியை பெற்று மதுரைக்கு பெருமை சேர்க்க நாம் அனைவரும் பணியாற்ற மதுரை மாநகர் மாவட்ட திமுக கழகம் இக்கூட்டத்தின் வாயிலாக அனைவரையும் கேட்டுக்கொள்கிறது.

மூன்றாவது தீர்மானமாக மதுரை மாநகர் மாவட்ட திராவிட முன்னேற்ற கழகம் தமிழ்நாட்டு மக்கள் முன்னே வைக்கும் மிகவும் முக்கியமான தீர்மானம் அது என்னவென்றால் பத்தாண்டுகளாக பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் ஆதிக்க மனப்பான்மை கொண்ட ஒரு கூட்டம் மட்டும் அரசு நிர்வாக அதிகாரத்தில் உள்ளே புகுந்து ஆதிக்கம் செலுத்த தொடங்கிவிட்டனர். இதன் மூலம் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான அரசியல் அதிகார நெருக்கடி உருவாக்கப்பட்டு அம் மக்களுக்கும், மக்களின் தலைவர்களுக்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி விட்டனர். மீண்டும் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால் அனைத்து சமுதாயமும் ஆர்.எஸ்.எஸ். கூட்டத்திற்கு அடிமையாக இருப்பதை தவிர வேறு வழியில்லை.

மேலும் அவர்களை திருப்திப்படுத்தினால் தான் வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தொழில்கள் செய்ய முடியும், உயிர் வாழ முடியும் என்ற நிலை உருவாகிவிடும்.

இதிலிருந்து விடுபட ஒரே வழி இந்த தேர்தல் மட்டும் தான், இந்த தேர்தலின் மூலம் தான் ஆதிக்க வெறி பிடித்த ஆர்எஸ்எஸ் காரர்களை விரட்ட முடியும், எனவே நாட்டின் அமைதியை பாதுகாக்க அனைத்து சமூக மக்களும் அச்சமின்றி தொழில் செய்ய பாரதிய ஜனதா கட்சி அப்புறப்படுத்தியே ஆக வேண்டும். அந்த கடமையை செய்ய, சமூக நீதியை பாதுகாக்க, திட்டமிட்டு ஏற்படுத்தும் சட்ட நெருக்கடியில் இருந்து ஜனநாயகத்தை பாதுகாக்க இந்திய நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று கூடி இந்தியா கூட்டணியை வெற்றி பெறச் செய்ய அனைத்து மக்களையும் மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. கழகம் இக்கூட்ட தீர்மானம் மூலமாக கேட்டுக்கொள்கிறது என்று பேசினார்.

இக்கூட்டத்திற்கு அவைத்தலைவர் மா.ஒச்சு பாலு தலைமை வகித்தார். கழக நிர்வாகிகள் பொன். முத்துராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மற்றும்

இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர்கள் சுப. திவாகரன், கம்பம் பாண்டியன், டாக்டர்.சுந்தர்ராஜன், மா.ஜெயராமன், கே.தனசெல்வம், மூவேந்திரன், முருகவேல், சௌந்தர்ராஜன், மாநில அணி நிர்வாகிகள் பாக்கியநாதன், ஆர். கணேசன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் கணேசன், விஜயராஜன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

கோவை தெற்கு மாவட்டம், வால்பாறை நகரத்தைச் சேர்ந்த த.பால்பாண்டி அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### தி.மு.க. மீனவர் அணி

# தூத்துக்குடி தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

### தி.மு.க.மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

தூத்துக்குடி தெற்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளராக **பி.சந்திரபோஸ்** (4/85, பொன்மாணிக்க தெரு, புன்னக்காயல், தூத்துக்குடி - 628 151.) நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மீனவர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.03.2024

**டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. மீனவர் அணி

# திருச்சியில் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் விற்பனைப் பிரிவு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி திறந்து வைத்தார்!

திருச்சி, மார்ச் 20-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 16.03.2024 அன்று திருச்சிராப்பள்ளி மேல புலிவார் சாலையில் உள்ள இரண்டு புத்தக விற்பனை நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் விற்பனை பிரிவை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 16.03.2024 அன்று திருச்சிராப்பள்ளி மேல புலிவார் சாலையில் உள்ள இரண்டு புத்தக விற்பனை நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் விற்பனை பிரிவை திறந்து வைத்தார். தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஆர்.கஜலட்சுமி, முன்னிலையில் நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடெங்கும், தமிழ்நாடு பாடநூல்கழகத்தின் நூறு விற்பனை நிலையங்களைத் தொடங்குவது என, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, முடிவெடுக்கப்பட்டு அதற்கான முதல் விற்பனை நிலையம் மார்ச் 01 அன்று பாரம்பரியமிக்க புத்தக நிலையமான ஹிக்கின் பாதம்ஸில் தொடங்கப்பட்டது. அதனை தொடர்ந்து 16.03.2024 அன்று திருச்சிராப்பள்ளி மேல புலிவார் சாலையில் உள்ள இரண்டு புத்தக விற்பனை நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் விற்பனை பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நமது திராவிட மாடல் அரசு பதவியேற்ற நாள் முதல், பல்வேறு புத்தக வெளியீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தி வாசிப்பிலே ஒரு அறிவுப் புரட்சியை ஏற்படுத்தி வருவதை அனைவரும் அறிவீர்கள். குறிப்பாக திசை தோறும் திராவிடம், முத்தமிழறிஞர் மொழிபெயர்புத் திட்டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம், நாளைய தலைமுறைக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் என்று பல்வேறு விதமான திட்டங்கள் நமது தமிழ்நாடு அரசால், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகத்தின் மூலம் செயல்படுத்தப் படுகின்றன.

இத்தகைய திட்டங்களின் கீழ் இதுவரை 340 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இனி வரும் மூன்று ஆண்டுகளில் 600 நூல்கள் வெளியிடப்படும் என்று இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் என்பது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட 40 க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் ஒன்றாகும். அதிலும் பாடநூல் கழகத்திற்கு ஒரு சிறப்பு என்னவென்று சொன்னால், தொடங்கியது முதல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே அந்நிறுவனத்துக்கு தலைவராக இருந்து, 32 துறை சார்ந்த 900க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டு தமிழ் வழியில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார். அந்தப் பணியை நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். விட்ட இடத்திலேயே தொடர்வது என்ற மரபுக்கேற்ப அப்போது கலை அறிவியல் நூல்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டன. இப்போது இதன் அடுத்த நிலைக்குச் சென்று கலைஅறிவியல் நூல்களோடு மருத்துவம், பொறியியல் போன்ற நூல்களும் தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றன. அந்த விதத்தில் எல்சிவியர் நிறுவனம் வெளியிட்டுள்ள கைடன் மற்றும் ஹால் என்பவர்கள் எழுதிய என்ற உலகெங்கும் படிக்கக் கூடிய 1200 பக்கங்கள் கொண்ட பிரமாண்ட புத்தகம் முதல் முதலாக தமிழ் மொழியிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன் முதலில் அப்படி ஒரு மருத்துவ நூல் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பது நமக்கு மகிழ்ச்சி தரக் கூடிய விஷயம். இதனைப் பாடநூல் கழகம் எல்சிவியர் நிறுவனத்தோடு இணைந்து மொழி பெயர்ப்பு செய்துள்ளது. அத்தகைய புத்தகங்கள் எல்லாம் இந்தப் புத்தக விற்பனை நிலையத்தின் மூலம் எல்லோரும் வந்து வாங்கிக் கொள்ள முடியும். அண்ணா சாலையில் அமைந்துள்ள ஹிக்கின் பாதம்ஸ் நிலையம் நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்டது. ஆங்கிலேயர் காலம் தொட்டே இங்கு நூல்களை வாங்கிச் செல்லும் புத்தகப் பிரியர்கள் அதிகம். அனைவரும் எளிதாக வாங்கும் வண்ணம் அனைவரின் பார்வையிலும் படும்படி நமது பாடநூல்கழகத்தின் புத்தகங்கள் இங்கே விற்பனை வரவுள்ளன. குழந்தைகளுக்கான இளந்தளிர் இலக்கித் திட்ட புத்தங்கள் குழந்தைகளை எளிதாகச் சென்றடையும் என்ற நம்பிக்கையை இது ஏற்படுத்துகிறது.

முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளான மார்ச் 01 அன்று 100 புத்தக நிலையங்களில் முதலாவது புத்தக நிலையத்தினை ஹிக்கின் பாதம்ஸில் தொடங்கப்பட்டது. அதனை தொடர்ந்து 16.03.2024 அன்று திருச்சிராப்பள்ளி மேல புலிவார் சாலையில் உள்ள இரண்டு புத்தக விற்பனை நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் விற்பனை பிரிவை திறந்து வைக்கின்ற வாய்ப்பு எனக்கு கிடைத்ததற்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இது ஒரு சமுதாயக் கடமை; அறிவுத் துறையை விரிவுபடுத்துவது அறிவுத் துறையில் பங்களிப்பு செய்வது நமது தமிழ் இலக்கியம் பாரம்பரியம் போன்ற விஷயங்களை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பது என்பது தான் நமது அரசினுடைய நோக்கம். இதில் எந்த பாரபட்சமும் நாம் காட்டுவதில்லை. தமிழ்நாட்டில் காந்தி, மாபெரும் தமிழ் கனவு மற்றும் பிரபல சாகித்ய அகாடெமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் இவற்றையெல்லாம் ஆங்கிலத்தில் கொண்டு வந்து அனைத்து மொழியினரையும் வாசிக்கச் செய்வதற்காக திசை தோறும் திராவிடம் என்ற திட்டத்தினைத் தொடங்கி நமது அரசு செயல்படுத்தி வருகிறது. அதன்படி தமிழ் இலக்கியங்கள் ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னடம் என்று அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. 50 க்கும் மேற்பட்ட நூல்கள் அவ்வாறு வெளிவந்துள்ளன. அவற்றில் பல நூல்கள் இங்கே ஏற்கெனவே கிடைக்கின்றன. இனி அனைத்து நூல்களும் கிடைக்கும் என்பது புத்தகப் பிரியர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கக் கூடிய ஒரு விஷயமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

நாம் தொடங்க இருக்கின்ற புத்தக நிலையங்கள் இனி அரசு நூலகங்கள், பிரபல வணிக வளாகங்கள் மற்றும் பிரபல புத்தக நிலையங்கள் என பலவற்றிலும் அமையவிருக்கின்றன. ஹிக்கின் பாதம்ஸ் நிறுவனம் நமக்கென இரண்டு பிரத்யேக புத்தக அலமாரிகளை ஒதுக்கி நமது புத்தகங்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்வதற்கு முன்வந்ததற்காக அந்த நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்வில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் ஆர்.கஜலட்சுமி, இணை இயக்குநர். சங்கர சரவணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கிருஷ்ணப்பிரியா, மண்டல தலைவர் மதிவாணன் மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் தலைமை!

குமரி , மார்ச் 20-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 18.03.2024 திங்கட்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் என். தில்லை செல்வம், மகளிர் அணிச் செயலாளர் திருமதி. ஜெ. ஹெலன் டேவிட்சன், வர்த்தகர் அணி இணைச் செயலாளர் என். தாமரைபாரதி, தலைமைக் கழக வழக்கறிஞர் ஏ.என். லிவிங்ஸ்டன், அயலக அணி துணைச் செயலாளர் எ. பாபு வினிபிரட், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் வி. ஜோசப் ராஜ், அமைப்புச் சாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளர் எம்.சிவராஜ், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் உட்பட மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஒருங்கிணைந்து ஒருமித்த கருத்துடன் தீவிரமாக களப்பணியை இன்றே தொடங்கி கழக தலைவர் ஆணைக்கிணங்க “நாற்பதும் நமதே, நாடும் நமதே” என்பதற்கிணங்க கடுமையாக உழைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாகர்கோவில், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய சட்டமன்ற தொகுதியில் அதிக வாக்குகள் பெற்றிட வேண்டும் என இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### திருச்சி வடக்கு மாவட்டம்

# தொட்டியம் மேற்கு ஒன்றியம், காட்டுப்புத்தூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

திருச்சி வடக்கு மாவட்டம், தொட்டியம் மேற்கு ஒன்றியம், காட்டுப்புத்தூர் பேரூர்ச் செயலாளர் கே.டி. செல்வராஜ் அவர்கள்மீது, நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக **கே.எம்.சுப்பிரமணியன்**, (காட்டுப்புத்தூர் & அஞ்சல், திருச்சி மாவட்டம்) அவர்கள் காட்டுப்புத்தூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட இராகி பேட்டை கிழக்கு ஒன்றியம் சட்டமன்ற மேம்பாட்டு நிதி உள்ளிட்ட பல்வேறு நிதிகளிலிருந்து என்.என்.கண்டிகை ஊராட்சி ஜி.சி.எஸ்.கண்டிகை ஊராட்சியில் பள்ளி கட்டிடம் எஸ்.விஜி.புரம் ஊராட்சி சமையல் கூடம் வேலன்கண்டிகை, காண்டபுரம் ஊராட்சி அங்கன்வாடிஉள்ளிட்ட பணிகளை மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம் எல்.ஏ. துவக்கி வைத்து செல்லாதுர் ஊராட்சி கழிவு நீர் கால்வாய் சானூர் மல்லாபுரம் ஊராட்சியில் மேம்பால திட்டப் பணியை பார்வையிட்டார். உடன் பெ.பழனி சி.என்.சண்முகம் கே.எம்.சுப்பிரமணியம் ரஞ்சிதா ஆபாவாணன், திலகவதி ரமேஷ் கே.சத்யராஜ், பொன்னி மேகநாதன் பிரமிளா வெங்கடேஷ், செல்வி சந்தோஷ், உமாபதி, சிவா, சம்பத், க சங்கரன், திருவேங்கடம், டில்லி பாபு, ரகு, வெங்கடேஷ், சுப்ரமணி, சுகுணா மூர்த்தி, கார்த்தி, மாத்தையா உள்பட அரசு அதிகாரிகள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், NTDACL குடிநீர் திட்டம், நகராட்சி மற்றும் பேரூராட்சி நிர்வாகம், சுற்றுலாத்துறை, சுரங்கம் மற்றும் கனிம வளத்துறை, சுற்றுச்சூழல் மாசுக்கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறைகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி மற்றும் தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி ஏத்தாப்பூர் பேரூராட்சி முத்துமலை முருகன் கோவில் முன்பாக கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி தொகுதி மேம்பாட்டு நிதி ரூ. .30. லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நவீன பயணிகள் நிழற் கூட திறப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஏத்தாப்பூர் பேரூராட்சி மன்றத் தலைவர் அன்பழகன், பொதுக்குழு உறுப்பினர் சோமசுந்தரம், ஏத்தாப்பூர் பேரூர் செயலாளர் பாபு (எ) வெங்கடேஸ்வரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சிவராமன், வார்டு உறுப்பினர் மணிகண்டன் மற்றும் கழக நிர்வாகிகள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

DMK IT WING

## தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணியின் சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகள் நியமனம்!

### தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி – மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் சட்டமன்றத் தொகுதி மற்றும் பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர் வாரியாக நிர்வாகிகள் நியமிக்கப்படுகிறார்கள்.

**கரூர் மாவட்டம்**

**குளித்தலை சட்டமன்ற தொகுதி**

**குளித்தலை தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. வெ.செல்வராஜ்
சமூகவலைதளம் - திரு. ர.பிரவீன்
மகளிர் - திருமதி. செ.ஆனந்தலெட்சுமி

**தோகைமலை மேற்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. இரா.பூபதிராஜா
சமூகவலைதளம் - திரு. மு.கலைகண்ணன்
மகளிர் - திருமதி.க.சித்ரா

**தோகைமலை கிழக்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு.மு.ஷாகுல்அமீது
சமூகவலைதளம் - திரு. பி.செல்வபெருமாள்
மகளிர் - திருமதி. அ.ரேவதி

**கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. ச.மணிகண்டன்
சமூகவலைதளம் - திரு. மா.சக்திவேல்
மகளிர் - செல்வி.கு.சரிதா

**கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. வீ.வேல்முருகன்
சமூகவலைதளம் - திரு. பெ.சிவக்குமார்
மகளிர் - திருமதி. பி.பொற்செல்வி

**குளித்தலை மேற்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. மு.பிரசன்னா
சமூகவலைதளம் - திரு. ச.அமிர்தராஜ்
மகளிர் - செல்வி. மு.ஸ்வேதா

**குளித்தலை கிழக்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. சி.சீனு வெங்கடேசன்
சமூகவலைதளம் - திரு. செ.பெரியசாமி
மகளிர் - திருமதி. வ.கனகா

**மருதூர் பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. சி.உதயக்குமார்
சமூகவலைதளம் - திரு. க.சக்திவேல்
மகளிர் - திருமதி. ச.தமிழ் அழகி

**நங்கவரம் பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. சு.திருமேனி
சமூகவலைதளம் - திரு. ச.சதிஷ்
மகளிர் - திருமதி. செ.சீதா

**குளித்தலை நகரம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. க.கலாநிதி
சமூகவலைதளம் - திரு. தி.நந்தகுமார்
மகளிர் - திருமதி. நா.விஜயலட்சுமி

**கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி**

**கிருஷ்ணராயபுரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. பி.தீலீபன்
சமூகவலைதளம் - திரு. கி.கண்ணன்
மகளிர் - திருமதி. செ.சரண்யா குழந்தைவேல்

**கடவூர் வடக்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. ப.காளிதாஸ்
சமூகவலைதளம் - திரு. து.மாசிலாமணி
மகளிர் - திருமதி. நா.மகேஸ்வரி

**கடவூர் தெற்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. த.பாலசுப்பிரமணியன்
சமூகவலைதளம் - திரு. கி.சதீஷ்குமார்
மகளிர் - செல்வி. பு.ஜெயஸ்ரீ

**கடவூர் மேற்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. க.சையது அபுதாகீர்
சமூகவலைதளம் - திரு. த.விஜயகுமார்
மகளிர் - செல்வி. பி.ஜெயலட்சுமி

**தாந்தோணி கிழக்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு.டி.ரவிக்குமார்
சமூகவலைதளம் - திரு. ரா.மோகன்ராஜ்
மகளிர் - செல்வி. மௌனிகா

**கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. வீ.முனியப்பன்
சமூகவலைதளம் - திரு. நீ.தனராஜ்
மகளிர் - செல்வி. ம.புனிதா

**கிருஷ்ணராயபுரம் பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. இ.பொன்மனராஜ்
சமூகவலைதளம் - திரு. ல.ரமேஷ்
மகளிர் - செல்வி. ஆ.சிந்துஜா

**உப்பிடமங்கலம் பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. பெ.மனோஜ்
சமூகவலைதளம் - திரு. மு.அருண்
மகளிர் - செல்வி.ச.கீர்த்தனா

**புலியூர் பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. சி.கண்ணன்
சமூகவலைதளம் - திரு. க.பாலகிருஷ்ணன்
மகளிர் - திருமதி. பு.வனிதா

**பழைய ஜெயகொண்டம் பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. ம.வசந்த்
சமூகவலைதளம் - திரு. ந.சக்திவேல்
மகளிர் - திருமதி.ரா.கோகிலா

**அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி**

**அரவக்குறிச்சி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. ரா.கார்த்திக்
சமூகவலைதளம் - திரு. கு.சிபு
மகளிர் - செல்வி. எம்.கவிதா

**க .பரமத்தி மேற்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. கோ.பொன்னாண்டவர்
சமூகவலைதளம் - திரு. க.சண்முக பரணி
மகளிர் - திருமதி.ச.மஹாலட்சுமி

**அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. ஜெ.சார்லஸ் அந்தோணி
சமூகவலைதளம் - திரு. நா.கமலகண்ணன்
மகளிர் - திருமதி.ர.நிர்மலாதேவி

**பள்ளப்பட்டி நகரம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. ஹ.ஷேக் அலாவுதீன்
சமூகவலைதளம் - திரு. அ.பாரூக் அலி
மகளிர் - திருமதி. பி.அப்ரசா பரிவின்

**புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. ரா.லோகேசன்
சமூகவலைதளம் - திரு. பெ.பிரகாஷ்
மகளிர் - திருமதி. க.பாக்கியலட்சுமி

**புகழூர் நகரம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. சாகுல் ஹமீது
சமூகவலைதளம் - திரு. ஆ.சூர்யகுமார்
மகளிர் - திருமதி. பி.ராதா

**க .பரமத்தி தெற்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. கு.ராமலிங்கம்
சமூகவலைதளம் - திரு. ச.செல்வராஜ்
மகளிர் - திருமதி. ம.சிந்துஜா

**க .பரமத்தி வடக்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. செ.மனோஜ்
சமூகவலைதளம் - திரு. க.திலக்
மகளிர் - செல்வி.ம.மஞ்சு

**அரவக்குறிச்சி மேற்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. ர.பூபாலன்
சமூகவலைதளம் - திரு. அ.யுவராஜ்
மகளிர் - திருமதி.மா.ஜெயந்தி

**அரவக்குறிச்சி பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. ப.ஆல்வின்
சமூகவலைதளம் - திரு. ரா.கவின் தனபால்
மகளிர் - திருமதி.பா.வசந்தி

**கரூர் மேற்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. செ.மணிவண்ணன்
சமூகவலைதளம் - திரு. து.சந்திரன்
மகளிர் - திருமதி.கெ.சித்ராதேவி

**கரூர் சட்டமன்ற தொகுதி**

**கரூர் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. க.குமரன் கருணாநிதி
சமூகவலைதளம் - திரு. எ.எச்.ஷாஜஹான்
மகளிர் - திருமதி. ப.கனிமொழி

**கரூர் கிழக்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. ஆ.பிரவீன் குமார்
சமூகவலைதளம் - திரு. வெ.சசிக்குமார்
மகளிர் - திருமதி.எஸ்.ரேவதி

**கரூர் வடக்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. தா.சந்தோஷ்குமார்
சமூகவலைதளம் - திரு. ப.பிரபாகரன்
மகளிர் - திருமதி.கா.ரேவதி

**கரூர் வடக்கு பகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. பு.பிரேம்நாத்
சமூகவலைதளம் - திரு. ந.அசோக்குமார்
திரு.என்.நவீன்
மகளிர் - திருமதி.பெ.நாகமணி

**கரூர் மத்திய கிழக்கு பகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. பி.சத்யராஜ்
சமூகவலைதளம் - திரு. பா.கோபி, திரு.எ.பிரபு
மகளிர் - செல்வி.ஜெ.திவ்யா

**கரூர் மத்திய மேற்கு பகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. செ.மதன்ராஜ்
சமூகவலைதளம் - திரு. து.ரஞ்சித்குமார்
மகளிர் - திருமதி.எம்.நிர்மலா

**கரூர் மத்திய பகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. க.மோகனசுந்தரம்
சமூகவலைதளம் - திரு. கோ.விக்ரம்
மகளிர் - திருமதி.விஜயபிரதா

**தாந்தோணி மேற்கு ஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு. பி.கார்த்திகேயன்
சமூகவலைதளம் - திரு. பொ.கதிரேசன்
மகளிர் - திருமதி.ச.மதுமித்தா

**கரூர் மேற்கு பகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திரு.பி.எஸ்.பிரபாகரன்
சமூகவலைதளம் - திரு. த.பாலகிருஷ்ணன்
மகளிர் - திருமதி.கெ.சசிரேகா

**கரூர் தெற்கு பகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**
களப்பணி - திருமதி. கி.சாந்தி
சமூகவலைதளம் - திரு. எ.விஜயதனபால்
மகளிர் - திருமதி.எஸ்.சுகுணா

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா
செயலாளர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

---

இந்தியா கூட்டணி பிரச்சார பொதுக்கூட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவருக்கு பிரமாண்ட வரவேற்பு!

## தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

### மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

தஞ்சாவூர், மார்ச் 20 -
தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத்தலைவர் சி.இறைவன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக ச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது : தஞ்சாவூர் , நாகப்பட்டினம் தொகுதி பிரச்சார பொதுக் கூட்டத்திற்கு 22ஆம் தேதி வருகை தரும் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தஞ்சை தமிழ் பல்கலைக் கழகம் அருகே மிக பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. அதில் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது பங்கேற்ற வேண்டும். மேலும், 23ஆம் திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரியில் இந்தியா கூட்டணி சார்பில் நடைபெற உள்ள தஞ்சை, நாகை நாடாளுமன்ற தொகுதி பிரச்சாரக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ள அந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் நம் தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, மாநகர, பேரூர் பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கனக்கான கழக தோழர்களை பங்கேற்க வைக்க உரிய ஏற்பாட்டினை சிறப்பாக செய்து, பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசை துடைத்தெறிய, இந்தியா கூட்டணி வெற்றிக்கு நாம் அனைவரும் அரும்பாடுபடுவோம். என பேசினார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே. ஜி.நீலமேகம், எம்.இராமசந்திரன், து.செல்வம், ஒரத்தநாடு தொகுதி மேற்பார்வையாளர் அக்ரி கணேசன், தஞ்சை மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், மாநிலக் கழக நிர்வாகிகள் எஸ்.ஜித்து, அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், எல்.ஜி.அண்ணா. புண்ணியமூர்த்தி, கனகவள்ளி பாலாஜீ, மாவட்ட ஊராட்சி தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

---

ப.கோவிந்தராசன் – கே.பழனியப்பன் ஏற்பாட்டில்!

## கீழ்வேளூர் ஒன்றியம் சாட்டியக் குடி அ.தி.மு.க. வினர் கழகத்தில் இணைந்தனர்!

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் முன்னிலையில்!

நாகை, மார்ச் 20 -
நாகை மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் சாட்டியக்குடி ஊராட்சி சமத்துவபுரம், மேலவிடங்கலூர் ஆகிய பகுதிகளில் இருந்து அ.தி.மு.க.வைச் சேர்ந்த 23 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி கீழ்வேளூரில ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளருமான ப. கோவிந்தராசன் தலைமை தாங்கினார்.

கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன் முன்னிலை வகித்தார். கிளை செயலாளர் எம். ராஜேந்திரன் வரவேற்றார்.

நிகழ்ச்சி யில் சாட்டியக்குடி அ.தி.மு.க. கிளை துணை செயலாளர் சங்கரய்யா தலைமையில் அக்கட்சியில் இருந்து 23 குடும்பங்களை சேர்ந்த 44 பேர் அக் கட்சியில் இருந்து விலகி நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தலைவருமான என். கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி நடராஜன், ஒன்றியக்குழு துணைத்தலைவர் புருஷோத்தமதாஸ், ஒன்றிய இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் வேணுகோபால், ஒன்றிய துணை செயலாளர் ஷேக், கிளை செ யலாளர் பன்னீர் செல்வம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## தலைமை அறிவிக்கும் வேட்பாளருக்கு அதிக வாக்குகளைப் பெற்றுத்தருவோம்!

### அதிராம்பட்டினம் மேற்கு நகரக் கழகத்தின் முதல் கூட்டத்தில் தீர்மானம்!

தஞ்சாவூர், மார்ச் 20 -
தஞ்சை தெற்கு மாவட்டம் அதிராம்பட்டினம் நகர தி.மு.கழகத்தை நிர்வாக வசதிக்காகவும் கழக பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கிழக்கு, மேற்கு என்று இரண்டாக அமைத்து அண்மையில் தலைமை அறிவித்தது. இதனையடுத்து அதிரை மேற்கு நகர அலுவலகத்தில் அதன் பொறுப்பு குழுவின் முதலாவது ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

பொறுப்புக் குழு உறுப்பினர் என்.ஏ.முகம்மது யூசுப் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் பொறுப்பாளர் எஸ்.ஹெச்.அஸ்லம், பொறுப்புக்குழு உறுப்பினர்களான எம்..சேக்தாவூத், என்.ரிபாயா, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் ஜமாலுதீன், சுற்றுச்சூழல் அணி இணை அமைப்பாளர் எம்.அகமது, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் அஸ்கர் ஆகியோர் பங்கேற்றனர்.

இதில் கழக நிர்வாக வசதிக்காகவும் கழக பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் அதிராம்பட்டினம் நகரத்தை கிழக்கு, மேற்கு என 2 கழகங்களாக அமைத்து அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், கழகத் தலைவரின் 71வது பிறந்த நாளையொட்டி சிறப்பு பொதுக் கூட்டம் நடத்துதல், வரும் மக்களவை தேர்தலில் தஞ்சாவூர் தொகுதியில் தலைமை அறிவிக்கும் வேட்பாளருக்கு அதிகப்படியான வாக்குகளை பெற்றுக்கொடுத்தல், திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை இல்லம்தோறும் கொண்டு சேர்த்தல், சிறுபான்மை சமூகத்தினர் மற்றும் முகாம்வாழ் தமிழர்களின் நலனுக்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்திருக்கும் குடியுரிமை திருத்த சட்டம் தமிழ்நாட்டில் அமல்படுத்தப்படாது என்று அறிவித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்ததோடு அதிரை மேற்கு நகர பகுதிகளில் கடந்த காலங்களில் கழக பொறுப்புகளில் இருந்த வார்டு செயலாளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முன்னோடிகள் அனைவரையும் அழைத்து சிறப்பு ஆலோசனை கூட்டம் நடத்துவது என்றும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

---

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, 152வது வட்டச் செயலாளர் எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19.03.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## கிருஷ்ணகிரியில் பாக முகவர்கள் கூட்டம்!

கிருஷ்ணகிரி, மார்ச் 20 –
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட வாக்குச்சாவடி முகவர்கள், பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம். மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமையில் நடை பெற்றது.

கூட்டங்களில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநகர செயலாளரும் மேயருமான எஸ்.ஏ. சத்யா, ஒசூர் தொகுதி பார்வையாளர் வேலூர் ரமேஷ், மாவட்ட அவை தலைவர் யுவராஜ் , மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி, மாவட்ட பொருளாளர் சுகுமாரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீராரெட்டி, எல்லோரா மணி, கிரீஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயராமன், முனிராஜ், அப்துல்கலாம், அருணாபூஷன், ஒன்றிய செயலாளர்கள் சீனிவாசலு ரெட்டி, திவாகர், ரகுநாத், நாகேஷ், சின்ராஜ், பாக்யராஜ், கருணாகரன், ரகுநாத், ராஜா, ஸ்ரீதர், பேரூர் செயலாளர்கள் சீனிவாசன், தஸ்தகீர், பகுதி செயலாளர் ஆனந்த்ய்யா, ராமு, நிர்வாகிகள் மற்றும் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள், பாக முகவர்கள், கழகத் தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட திருத்தணி ஒன்றியம் செருக்கனூர் கிராமத்தில் நீண்ட நாள் கோரிக்கையான செருக்கனூரில் இருந்து திருத்தணி மற்றும் சோளிங்கர் வரை செல்லும் அரசு பேருந்து சேவையை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கொடியசைத்து துவக்கி வைத்தார். அருகில் ஒன்றிய கழக செயலாளர் ஆர்த்தி ரவி, பொது மேலாளர் தேவன் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினை பல்வேறு கட்சிகள் - அமைப்பினர் சந்தித்து - தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மனித நேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜவாஹிருல்லா சந்தித்து மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சட்டமன்ற உறுப்பினர் ப.அப்துல் சமது மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஆதித்தமிழர் பேரவை கட்சியின் தலைவர் அதியமான், நிர்வாகிகளுடன் சந்தித்து மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் நிர்வாகிகளுடன் சந்தித்து மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, துணை பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி, நிர்வாகிகளுடன் சந்தித்து மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார்.

### “தமிழ்நாட்டுக்கு பிரதமர் மோடி எத்தனை முறை வந்தாலும் தாமரை மலரவே மலராது” - வைகோ!

## தேர்தல் விதிமுறையை மீறிய பிரதமர் மீது தேர்தல் ஆணையத்திடம் புகார்!

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பேட்டி!





சென்னை, மார்ச் 20 -

தேர்தல் விதிமுறைகளை மீறிய பிரதமர் மோடி மீதும், பா.ஜ.க., மீதும் தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்படும் என இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் முத்தரசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு திருப்பூர் தொகுதியும், நாகை தொகுதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருப்பூர் தொகுதியில் சுப்பராயனும், நாகை தொகுதியில் வை.செல்வராஜியும் போட்டியிடவுள்ளதாக அக்கட்சி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்நிலையில், மாநிலச் செயலாளர் முத்தரசன் தலைமையில் இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் சுப்பராயனும், செல்வராஜியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முத்தரசன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி அமோக வெற்றி பெறும் என்று தெரிவித்தார். பிரதமர் மோடி தேர்தல் விதிமுறைகளை அப்பட்டமாக மீறி வருகிறார் என்று முத்தரசன் குற்றம்சாட்டினார்.

தேர்தல் விதிமுறைகளை மீறிய பிரதமர் மோடி மீதும், பா.ஜ.க. மீதும் தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்படும் என்றும் இரா. முத்தரசன் தெரிவித்தார்.

**ம.தி.மு.க. வைகோ பேட்டி!**

அண்ணா அறிவாலயத்துக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுடன் வருகை தந்த அக்கட்சியின் திருச்சி தொகுதி வேட்பாளர் துரை வையாபுரி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, அளவுக்கு அதிகமான பொய்களை பேசி வருகிறார் பிரதமர் மோடி என்று சாடினார்.

நாடாளுமன்றத் தேர்தலுடன் பா.ஜ.க.வின் ஆட்டம் அனைத்தும் காணாமல் போகும் என தெரிவித்த வைகோ, தமிழ்நாட்டிற்கு பிரதமர் எத்தனை முறை வந்தாலும் பா.ஜ.க.வின் தாமரை மலரவே மலராது என்றும் திட்டவட்டமாக தெரிவித்தார்.

## நாடு மாற்றத்தை விரும்புகிறது!

### அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேச்சு!



புதுடெல்லி, மார்ச் 20-

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை மக்களிடம் எடுத்துச்செல்ல வேண்டும் என அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி தலைமையகத்தில் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூட்டம் அக்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர், முன்னாள் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் பலரும் பங்கேற்றனர்.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை குறித்து ஆலோசனை நடத்த செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மல்லிகார்ஜுன கார்கே உறுப்பினர்களை வரவேற்றுப் பேசினார்.

தேர்தல் அறிக்கையில் என்ன வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தாலும் கட்டாயம் அமல்படுத்தப்படும்.

“ஆவாஸ் பாரத் கி” என்று அழைக்கப்படும் ஆன்லைன் இணையதளம் மூலமாகவும் ஆலோசனைகள் மற்றும் கருத்துகள் கோரப்பட்டதாக அவர் கூறினார்.

தேர்தல் அறிக்கையில் என்ன வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தாலும் கட்டாயம் அமல்படுத்தப்படும். தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகள் அளிப்பதற்கு முன் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய ஆழமாக ஆலோசிக்கப்பட்டுள்ளது.

நமது தேர்தல் அறிக்கைக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு கிடைக்கவும், நமது வாக்குறுதிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு செல்லப்படுவதையும் நிர்வாகிகள் உறுதி செய்ய வேண்டும்.

நகரங்கள், கிராமங்களில் வசிக்கும் காங்கிரஸ் தொண்டர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் தேர்தல் அறிக்கையைக் கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

## ஒன்றிய அமைச்சர் பசுபதி குமார் பராஸ் ராஜினாமா!

### பீகாரில் ‘சீட்’ தராததால் அதிருப்தி!

புதுடெல்லி, மார்ச் 20-

மக்களவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் ராஷ்ட்ரீய லோக் ஜனசக்தி கட்சிக்கு பிஹாரில் ஓர் இடம் கூட கொடுத்ததால், அக்கட்சியின் தலைவர் பசுபதி குமார் பராஸ் தனது மத்திய அமைச்சர் பதவியை செவ்வாய்க்கிழமை ராஜினாமா செய்துள்ளார்.

தனது ராஜினாமா குறித்து செய்தியாளர்களிடம் பேசிய பசுபதி குமார், “எனது கட்சிக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. கட்சியின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசித்த பின்னர் எனது அடுத்தக்கட்ட அரசியல் நகர்வு குறித்து அறிவிப்பேன்” என்று தெரிவித்தார். உணவு பதப்படுத்தும் துறையில் மத்திய அமைச்சராக இருந்த பசுபதி குமார், மறைந்த ராம் விலாஸ் பாஸ்வானின் சகோதரர் ஆவார்.

பிஹாரின் ஹாஜிபூர் (தனித் தொகுதி) மக்களவைத் தொகுதியின் தற்போதைய எம்.பி.யான பசுபதி குமார் மீண்டும் அதே தொகுதியில் இருந்து 2024 மக்களவைத் தேர்தலில் போட்டியிட விரும்பினார். ராம் விலாஸ் பஸ்வான் 8 முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சாதனை படைத்த இந்தத் தொகுதி, அவரது மகனான சிராக் பாஸ்வானுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

பிஹாரில் திங்கள் கிழமை நடந்த என்டிஏ கூட்டணியின் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையில், சிராக் பாஸ்வான் தலைமையிலான எல்ஜே கட்சிக்கு ஹாஜிபூர் உட்பட 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, என்டிஏ கூட்டணி ஆட்சியில் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த ஒரே கூட்டணிக் கட்சித் தலைவரான பசுபதி குமார், தான் நடத்தப்பட்ட விதம் குறித்து அதிருப்தியை வெளிப்படுத்தும் முன்பு, “பிரதமர் மோடி சிறந்த தலைவர். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்டிஏ கூட்டணிக்கு நான் விசுவாசமாக இருந்தேன். அதற்கு வெகுமதியாக அநீதியை பெற்றுள்ளேன்” என்றார்.

### மாற்றுத் திறனாளிகள், 85+ முதியவர்கள்

## அஞ்சல் வழி வாக்களிக்க மார்ச் 25க்குள் விண்ணப்பிக்கலாம்!

சென்னை, மார்ச் 20-

நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலை முன்னிட்டு சென்னை மாவட்டத்தில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் அஞ்சல் வழியில் வாக்களிப்பதற்கு மார்ச் 25 ஆம் தேதிக்குள் படிவம் 12Dயை பூர்த்தி செய்து வழங்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு “இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள மக்களவைப் பொதுத் தேர்தல் 2024னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் அஞ்சல் வழியில் வாக்களிப்பதற்குரிய நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகம் சார்பில் எடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்துக்குட்பட்ட 3 மக்களவைத் தொகுதிகளில் உள்ளடங்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிப்பதில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டு, அஞ்சல் வழியில் வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தேர்தலில் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்களின் விருப்பத்தை பெறுவதற்கு வசதியாக அவர்களது இல்லங்களுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் படிவம் 12D மற்றும் வாக்காளர் பட்டியலுடன் நேரில் வருகை தருவார்கள்.

அவ்வாறு தங்களது இல்லங்களுக்கு வருகை தரும் போது உரிய படிவத்தில் தங்களது விருப்பத்தை படித்து பார்த்தோ அல்லது படிக்க கேட்டோ, ஆதாரங்கள் ஏதும் கோரும் பட்சத்தில் அதன் நகலை சமர்ப்பித்து, ஒப்பம் செய்து தங்களது ஒத்துழைப்பை மாவட்ட நிர்வாகத்துக்கு வழங்கலாம்” என்று அவர் கூறியுள்ளார்.

## சிந்துவெளிப் பகடை விளையாட்டு!



கீழடி அகழ்வாய்வு பழந்தமிழர் குறித்தும், சிந்துவெளிப் பண்பாடு குறித்தும் பல தகவல்களை உலகுக்கு அளித்து வருகிறது. அதேபோல் சிந்துவெளி தொடர்புடைய இடங்களில் காணப்படும் அகழ்வுப் பொருட்களும் பண்டைய தமிழர்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றைச் சொல்வதாக அமைகின்றன. பாகிஸ்தானில் ஓர் அகழ்வாய்வில் கிடைத்த சுடுமண்ணால் ஆன பகடை, கீழடியில் கிடைக்கப் பெற்ற பகடையுடன் ஒத்துப்போவதாக உள்ளது என ஏற்கெனவே தெரிந்தது.

சிந்துவெளி ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன், இது தொடர்பாக 'பகடைகள் உருள்கின்றன' என தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். அதில், "பகடை விளையாட்டை அடிப்படையாகக் கொண்ட மகாபாரதம் தொடர்பான அகழாய்வுத் தலங்கள் எவற்றிலும் பண்டைய காலத்தோடு தொடர்புப்படுத்தக்கூடிய பகடைகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை! 'பல இடங்களில்' தோண்டித் தோண்டிப் பார்த்தாலும் கிடைக்காத பகடை, தோண்டத் தயங்கி, பின்னர் தோண்டிய கீழடியில் எளிதாகக் கிடைக்கிறது. இதுவும்கூட ஒரு பகடை விளையாட்டுதான்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மைதான் சிந்துவெளிப் 'பகடை' ஆய்வு, ஆரியப் பகடை விளையாட்டை அம்பலப்படுத்துகிறது!

## ஃப்ளாஷ்பேக்



கி.தம்பிதுரை



### பொங்கல் 'வாழ்த்து'!

1974-ஆம் ஆண்டு பிறந்த எனக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் தம்பிதுரை என்று பெயர் சூட்டினார். சிறுவயது முதலே கழக உணர்வுடன் வளர்ந்த நான், 2001-ஆம் ஆண்டில் பகுதிப் பிரதிநிதியாக இருந்தேன். அப்போது ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்த தலைவர் தளபதி அவர்களை ஆயிரம் விளக்கு (கிழக்கு) பகுதி 117-வட்டத்தில் பொங்கல் விழாவுக்கு அழைத்து வந்தோம். நிகழ்ச்சியில் உரையாற்றிய தளபதி அவர்கள் எங்களுக்கெல்லாம் வாழ்த்துச் சொன்னதுடன், இறுதியாக எங்கள் வட்டச் செயலாளர் கிறிஸ்டி அவர்கள் பெயரை குறிப்பிட்டுப் பாராட்டினார்.

**–கி.தம்பிதுரை, மாவட்டத் துணை அமைப்பாளர், இலக்கிய அணி, சென்னை மேற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வேலைவாய்ப்பு நுழைவு!

1972-ஆம் ஆண்டு, கலைஞர் இரண்டாவது முறையாக முதலமைச்சரானதும், ஓ.பி.சி, பி.சி, எஸ்.சி, வேலையில்லா பட்டதாரிகள் நிரந்தர உதவித் தொகையுடன், மாவட்ட ஆட்சியர் வழியாக அரசு அலுவலகங்களில் உதவியாளர்களாகச் சேர்க்கப்பட்டனர். இவர்கள் பணியாளர் தேர்வாணையப் போட்டித் தேர்வில் கலந்துகொண்டால், அனுபவத்துக்குத் தனி மதிப்பெண் வழங்கப்பட்டு, வேலையில் முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதன் மூலம் அனைவரும், அனைத்துப் பணிகளுக்கும் நுழைய வாய்ப்பு உருவானது.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 3

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்!
அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு
குறித்த வரலாற்றைப் பேசும்
எல்லோருக்கும் எல்லாம்!

பார்ப்பனரல்லாத மக்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகள் வெற்றிகரமாக இயங்கியதைக் கண்டு மகிழ்வடைந்த ஃபுலே மேலும் பள்ளிகளைத் தொடங்கினார். மராட்டிய மாநிலம் முழுமைக்கும் ஜோதிராவ் ஃபுலேவின் புகழ் பரவியது. 'பெண் கல்வியின் பாதுகாவலன்', 'ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலன்' என்றெல்லாம் பாராட்டப்பட்டார்.

கல்விப் பாதையின் மூலம் சமத்துவ உணர்வு வளர்ந்து, இந்தியாவெங்கும் பரவியது. கல்வியே சமூகத்தில் சமத்துவத்தைக் கொண்டுவர முடியும் என்ற உணர்வெழுச்சி அனைவரையும் தீண்டியது. பள்ளிக்கூடங்களை நோக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் வந்தனர். கல்வியும் அறிவும் பார்ப்பனரல்லாத மக்களைத் தீண்டியதால், வைதீகர்கள் புண்பட்டனர்.

**இந்த நாட்டின் உயிரும் உடலும் சூத்திரர்களே!. சூத்திரர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை அரசு களைந்திட வேண்டும்.**

தீண்டப்படாத சாதியினர் பள்ளிக்கூடங்களுக்கு வருவதால், நாங்கள் பள்ளிகளில் இருந்து வெளியேறுகிறோம் என்றனர். ஒடுக்கப்பட்ட சாதிக் குழந்தைகள், உயர்சாதியினருடன் ஒரே அறையில் இருந்து கல்வி கற்பதால், 'தீட்டு ஏற்படுகிறது' என்றனர். 'தீண்டத்தகாத சாதியினரை பள்ளிக்குள் அனுமதித்தால், கலகம் வெடிக்கும்' என்று வைதீக ஆதரவாளர்கள் மிரட்டினர். எதற்கும் ஜோதிராவ் ஃபுலே அஞ்சவில்லை. 'கல்வியே கலங்கரை விளக்கம்' என்றார்.

### ஹண்டர் கமிஷன்

1854-ஆம் ஆண்டு, கிழக்கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக இருந்த சார்லஸ் வுட் அன்றைய இந்தியாவின் கல்விக் கொள்கையில் செய்ய வேண்டிய பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை கவர்னர் ஜெனரல் டல்ஹவுசி பிரபுவுக்கு அனுப்பினார். அவர் பரிந்துரைகளின்படி சென்னையிலும், பம்பாயிலும், கல்கத்தாவிலும் 1857-ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டன. 1882-இல் இந்தியாவின் கல்வி நிலையை விரிவாக ஆய்வு செய்ய வில்லியம் ஹண்டர் தலைமையில் ஒரு ஆய்வுக்குழு அமைக்கப்பட்டது. 20 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவில் 7 இந்தியர்களும் இடம்பெற்றிருந்தனர். அவர்களில் ஒருவர் கூட ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை.

இந்தக் குழு இந்தியா முழுவதும் பயணித்து, பல்வேறு தரப்பினரிடம் இருந்து விண்ணப்பங்களையும் கருத்துகளையும் பெற்றது. 1848-ஆம் ஆண்டு முதல் 30 ஆண்டுகளாக கல்விப் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஜோதிராவ் ஃபுலே இந்தக் குழுவிடம் இந்தியக் கல்வி முறையில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் அடங்கிய விண்ணப்பத்தை அளித்தார்.

வில்லியம் ஹண்டர்



## கல்வியே கலங்கரை விளக்கம்!

### விண்ணப்பத்தில் என்ன சொன்னார் ஃபுலே?

வியர்வை சிந்தி உழைக்கும் அடித்தட்டு விவசாய மக்களிடம் இருந்து பெறப்படும் வரியை மேல்தட்டு மக்களின் கல்விக்காக அரசு செலவிட்டு வருகிறது. அதன் விளைவு அனைத்து அரசு அமைப்புகளிலும் பிராமண ஆதிக்கமே நிலவுகிறது. இந்த ஏகபோக உரிமையைக் கட்டுப்படுத்துவதே அரசின் கடமையாக இருக்கவேண்டும்.

அனைத்து உயர்பதவிகளையும் பார்ப்பனர்களே ஏகபோகமாக அனுபவிக்கும் முறையை மாற்றி, அரசு வேலைகளில் மற்ற சாதியினரையும் அனுமதிக்க வேண்டும். இந்த நாட்டின் உயிரும் உடலும் சூத்திரர்களே!. சூத்திரர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை அரசு களைந்திட வேண்டும். கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் சூத்திரர்களுக்கு உரிய இடம் தர வேண்டும் என்று ஃபுலே கோரினார்.

சூத்திரர்களும் ஆதிசூத்திரர்களும் கல்வி கற்றுக்கொள்ள வேண்டும். கல்வி கற்று அறியாமையை நீக்கிக் கொள்வதன் மூலம் பார்ப்பனர்களால் இறுக்கமாகக் கட்டப்பட்டுள்ள அடிமைக் கயிற்றை அறுத்தெரிய முடியும் என்று ஃபுலே நம்பினார். ஃபுலேவின் அனைத்து முயற்சிகளுக்கும் அவரது மனைவி சாவித்திரி பாய் துணை நின்றார்.

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** 3

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...




## சுடரொளி பாய்ச்சிய சுயமரியாதை மாநாடு!

ஒரு மாநாட்டால் என்ன செய்துவிட முடியும் என்று கேட்பவர்களுக்கு... ஒரு மாநாடு வளைந்த முதுகை நிமிர்த்தும்; இடுப்பில் கட்டப்பட்ட துண்டை தோளுக்கு உயர்த்தும்; சட்டையில்லாத சாதி என்ற நிலையை மாற்றும்; அடுப்படியில் அடைக்கப்பட்ட சமூகத்தை விடுவிக்கும்! ஆம்... அவற்றையெல்லாம் செய்துகாட்டிய ஒரு மாநாடுதான் செங்கல்பட்டில் நடைபெற்ற 'முதல் சுயமரியாதை மாநாடு'.

1929-ஆம் ஆண்டு டிசம்பர் 17 அன்று, காலை 7 மணிக்கு சென்னை தியாகராயர் மண்டபத்தில் இருந்து செங்கல்பட்டு மாநாட்டுத் திடலை நோக்கி 36 மைல் தொலைவுக்கு ஊர்வலம் தொடங்குவதாக இருந்தது. ஆனால், கூட்ட நெரிசலில் தலைவர்கள் வந்து சேரவே மணி 8.30 ஆகிவிட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட கார்கள், சுமார் 30 பேருந்துகள் வரிசைகட்டி ஊர்வலம் தொடங்கியது. பெரியார் உள்ளிட்ட தலைவர்கள் மீது வழியெங்கும் மலர்கள் மழையாகப் பொழிகின்றன. முழக்கங்கள் விண்ணதிர்கின்றன. மேளதாளங்கள், சிற்றுண்டிகளுடன் மக்கள் அளித்த வரவேற்பால், ஊர்வலம் முடிய காலை 11.30 மணி ஆகிவிட்டது.

பிரமாண்ட முகப்பு, வீட்டுப்பொருள் காட்சிகள், தொழில் கண்காட்சிகள், சிற்றுண்டிச் சாலைகள், ஆங்கில முறை ஓட்டல்கள், விவசாயக் கண்காட்சிகள், எந்திரக் கண்காட்சிகள், வாசக சாலைகள், சுமார் 2 ஆயிரம் தோரண விளக்குகள், பூந்தோட்டங்கள், தலைவர்களின் சிலைகள் என மாநாட்டின் ஏற்பாடுகள் மிகப் பிரமாண்டமாக இருந்தன. ஊர்வலம் வரும் முன்பே மாநாட்டுத் திடலுக்குள் 20 ஆயிரம் பேர் இருந்ததாகப் பதிவுகள் சொல்கின்றன.

பனகல் அரசர் படத்தைச் சட்டசபை உறுப்பினர் எம்.கிருஷ்ண நாயர் திறந்துவைக்க மாநாடு தொடங்கியது. கலைநிகழ்ச்சிகள், தலைவர்கள் உரை, இளைஞர் மாநாடு என 2 நாள் நிகழ்வும் புதுவிதமான அரசியல் வடிவத்தைத் தமிழ்நாட்டுக்குக் கொடுத்தன. இரண்டாம் நாள் இரவு உணவுக்குப் பிறகு 10 மணி அளவில் நிறைவுப் பொதுக்கூட்டம் தொடங்கி, மறுநாள் விடியற்காலை 5 மணி வரை நீடித்தது. இந்த மாநாட்டில்தான் பெயருக்குப் பின்னால் ஒட்டிக்கொண்டிருக்கிற சாதிப் பட்டத்தைக் கைவிட வேண்டுமென்று, தீர்மானம் நிறைவேற்றினார் பெரியார். அவரோடு சேர்ந்து ஒட்டுமொத்த தமிழ்நாடும் சாதிப் பட்டத்தை விட்டொழித்தது.

**ஊர்வலம் வரும் முன்பே மாநாட்டுத் திடலுக்குள் 20 ஆயிரம் பேர் இருந்ததாகப் பதிவுகள் சொல்கின்றன.**



செங்கல்பட்டு சுயமரியாதை மாநாடு-1929

"ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு, புத்தகம், உண்டி, உடை உள்ளிட்டவற்றை இலவசமாக வழங்க வேண்டும், பெண்களுக்கு சொத்தில் சம பங்கு வழங்க வேண்டும்" என்பன போன்ற பல தீர்மானங்கள் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு, பின்னாளில் தி.மு.க. ஆட்சியில் சட்டங்களாகின. 1938-ஆம் ஆண்டுப் பெண்கள் மாநாட்டில் பெரியாருக்கு **'பெரியார்'** என்ற பட்டம் கொடுக்கப்படுவதற்கு முன்பே, செங்கல்பட்டு மாநாட்டுத் தீர்மானத்தில் **'ராமசாமி பெரியார்'** என்றே தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.


பந்தலில் மாநாட்டுச் செலவுக்காக வைக்கப்பட்டிருந்த உண்டியலில் 3 ஆயிரம் ரூபாய் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. அன்றைய தேதியில் ஒரு சவரன் நகையே 9 ரூபாய்தான். சுயமரியாதை இயக்கத்தின் தாக்கம் எந்த அளவுக்கு வீரியமாக இருந்தது என்பதற்கு, இதுவே சான்றாக இருக்கிறது. இந்த மாநாட்டிற்குப் பின்னர் **'சுயமரியாதை நமது பிறப்புரிமை'** என்ற முழக்கம், தமிழ்நாட்டின் பட்டிதொட்டி எங்கும் பெரியாரின் பயணங்களால் பலமடங்கு ஒலித்தது.

**...கூட்டம் திரளும்**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

423

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131